வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 18.10.2022 செவ்வாய்க்கிழமை | இதழ் : 313 | பக்கங்கள் : 16

## ஹெரோயின் பாவித்த நால்வர் கைதாகினர்!

யாழ்ப்பாணம், ஒக். 17

ஊசி மூலம் ஹெரோயின் போதைப் பொருளை எடுத்துக் கொண்டிருந்த நால்வரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் நால்வரும் அரசடிப் பகுதியில் வைத்து யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் உபபொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான அணியினரால் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 2 கிராம் ஹெரோயினும் கைப்பற்றபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. 15

# இலங்கையின் வடக்கில் சீன இராணுவ பிரசன்னம்

### இந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் தமிழக புலனாய்வு பிரிவு எச்சரிக்கை

சென்னை, ஒக். 18

இலங்கையில் - வடக்கு மாகாணத்தில் சீன இராணுவத்தின் பிரசன்னம் அதிகரித்துள்ளது. இவர்கள், கடலட்டை வளர்ப்பை தொடங்குவதற்கு அதிநவீன சாதனங்களை பயன்படுத்துகின்றனர் என்று தமிழக புலனாய்வு பிரிவு எச்சரித்துள்ளது.

அயல்நாட்டில் (இலங்கை) சீனாவின் நடவடிக்கைகள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது. கரையோரப் பகுதிகளில் கண்காணிப்பை 15

# 13ஆம் திருத்தத்துக்கு பதில்! புதிய ஒப்பந்தம் அவசியம்!!

## இந்தியாவுக்கான தூதுவர் மொறகொட

### இந்தியாவின் பாதுகாப்பு அச்சுறுத்தல் இலங்கைக்குமே என்றும் தெரிவிப்பு!



புதுடில்லி, ஒக்ரோபர் 18

அரசியல் ரீதியாக இலங்கை நிலைமாறும் கட்டத்தில் இருக்கிறது. சமூக, அரசியல் ரீதியான ஒப்பந்தங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. இலங்கை ஒரு சிக்கலான நாடு. பல மதங்கள், இனங்களுடன் 13ஆம் திருத்த சட்ட பிரச்னையும் உள்ளது. நாம் ஒரு புதிய ஒப்பந்தத்தை உருவாக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார் இந்தியாவுக்கான இலங்கையின் தூதுவர் மிலிந்த மொறகொட.

## பெற்றோல் ரூ. 40, டீசல் ரூ. 15 நேற்றிரவு முதல் குறைந்தது!

கொழும்பு, ஒக். 18

பெற்றோலின் விலை 40 ரூபாயாலும், ஓட்டோ டீசலின் விலை 15 ரூபாயாலும் நேற்றிரவு 9 மணி முதல் குறைக்கப்பட்டதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இதன்படி, 92 ஒக்ரென் பெற்றோலின் புதிய விலை ஒரு லீற்றர் 370 ரூபாயாகவும், 15

### ஜப்பான் அளித்த நிதி விவகாரம்:

## மன்னிப்பு கோரினார் யாழ். மாநகர முதல்வர்!

யாழ்ப்பாணம், ஒக். 18

யாழ். மாநகர சபையின் சுகாதார தேவைக்கான வாகன கொள்வனவுக்காக ஜப்பான் அரசாங்கம் வழங்கிய நிதியை பயன்படுத்துவதில் தவறிழைக்கப்பட்டுள்ளது. இதற்காக தான் வருத்தம் தெரிவிப்பதாக சபையில் முதல்வர் வி. மணிவண்ணன் பகிரங்கமாக மன்னிப்பு கோரினார்.

மேலும், ஜப்பான் அரசின் 15




## சர்வதேச விசாரணையே எங்களுக்கு வேண்டும்!

### காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கொழும்பில் போராட்டம்

கொழும்பு, ஒக். 18

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் (ஐ. நா.) பணிமனை முன்பாக நீதி கோரி நேற்று போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கம் முன்னெடுத்த இந்தப் போராட்டத்தில், “காணாமல் போனோர் அலுவலகம் ஊடாக வழங்கப்படும் இழப்பீடு 15

## 22ஆவது திருத்த சட்டத்தில் இரு மாற்றங்கள் மட்டுமே!

### நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, ஒக். 18

22ஆவது அரசமைப்பு திருத்தத்தில் எதிர்கட்சி தலைவரால் கோரப்பட்ட இரு திருத்தங்கள் மாத்திரமே மேற்கொள்ளப்படும். வேறு திருத்தங்களை மேற்கொள்ள எந்தத் தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார். 15

## தமிழர்களின் உரிமைகளுக்காக அறவழியில் குரல் கொடுப்போம்!

### சிறீதரன் எம்.பியிடம் கமல் உறுதி



கொழும்பு, ஒக். 17

“இலங்கைத் தமிழர்களின் உரிமைகளுக்கு அறவழியில் மக்கள் நீதி மய்யம் தொடர்ந்து குரல் கொடுக்கும்.” - இவ்வாறு மக்கள் நீதி 15

## இந்திய குடியுரிமையை பெற ஈழத் தமிழர் தகுதியானோர்!

### சென்னை மேல்நீதிமன்று சுட்டிக்காட்டு!

சென்னை, ஒக். 18

இந்திய குடியுரிமை திருத்தச் சட்டப்படி இலங்கை இனப் பிரச்னையால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் இந்திய குடியுரிமை பெற தகுதியானவர்கள் என்று சென்னை மேல் நீதிமன்றக் கிளை சுட்டிக்காட்டியுள்ளது.

மேல் நீதிமன்ற கிளையில் திருச்சியை சேர்ந்த அபிராமி தாக்கல் செய்த மனு “என் பெற்றோர் இலங்கையைச் சேர்ந்தவர்கள். இலங்கைப் போரால் அகதிகளாக இந்தியா வந்தனர். நான் இந்தியாவில் 1993 இல் பிறந்தேன். இந்தியாவில் 15

## பஸ் கட்டணம் குறையாது!

கொழும்பு, ஒக். 18

டீசல் விலை 15 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதால் பஸ் கட்டணத்தை தற்போது குறைக்க முடியாது. தற்போதைய பேருந்து கட்டணத்துக்கும், எரிபொருள் கட்டணத்துக்கும் இடையில் 15

## இப்படியும் நடக்கிறது...!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் நடைபெற்ற தேர்தல் மூலம் ஜனாதிபதி ஆகியதுமே அரசியல் வட்டாரங்களில் அவரையே அடுத்த ஜனாதிபதி தேர்தலிலும் பொதுஜன பெரமுன ஆதரிக்கும் என்றும் அவர்களின் ஆதரவுடன் அவர் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார் எனவும் பரவலாகக் கூறப்பட்டதுண்டு.

அதற்கு பலரும், பொதுஜன பெரமுன தற்போது மக்கள் மத்தியில் பாரிய அளவில் எதிர்ப்பை சம்பாதித்திருப்பதால், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு பொதுஜன பெரமுன எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்தால், இருபது முப்பது தேர்தலில் நாமல் களமிறங்க பொருத்தமாக இருக்கும் என்று மகிந்த தரப்பில் கணிக்கப்படுவதாகவும் கூறப்பட்டது.

இவையெல்லாம் மகிந்த - ரணில் தரப்புகளிடையே உடன்பாடு காணப்பட்டவை அல்ல. என்றாலும், மகிந்த தரப்பு ரணில்மீது வைத்திருக்கும் நம்பிக்கையே அவ்வாறு பலரையும் எண்ணத் தோன்றியது.

ஆனால், அரசியலில் நரி என்று வர்ணிக்கப்படும் ரணில் விக்கிரமசிங்க என்ன கணக்கைப் போட்டிருக்கிறார் என்பது யாரும் ஊகிக்க முடியாதது.

ரணில் மீதான நம்பிக்கை இப்போது மகிந்த தரப்பிலும் மெல்ல மெல்ல தளர்ந்து வருவதாகக் கூறப்படுகின்றது. அதனால்தான், ரணிலின் கோரிக்கையை - அல்லது விருப்பத்தை ஏற்றுக்கொள்ள மகிந்த தரப்பு மறுத்து வருவதாலேயே புதிய அமைச்சரவை நியமனம் பின்னுக்குப் போய்க் கொண்டிருக்கின்றது என்கின்றன விசயமறிந்த வட்டாரங்கள்.

நாமல் ராஜபக்ஷவுக்கும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கும் அமைச்சர் பதவி வழங்குவதற்கு இது பொருத்தமான நேரமல்ல என்பதில் ஜனாதிபதி ரணில் உறுதியாக இருக்கின்றார். அவர்கள் இருவரையும் அமைச்சராக்கியே தீருவது என்பதில் பொதுஜன பெரமுனவும் தீவிரமாக இருக்கின்றது. இதனால்தான் அமைச்சரவை நியமனம் பின்நோக்கி சென்றுகொண்டே இருக்கின்றது.

பொதுஜன பெரமுன கட்சியின் சித்தாந்தத்துக்கு முரணான அமைச்சரவையே தற்போது இயங்கி வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அண்மையில் சந்தித்த அக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனராம்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்த அதே அமைச்சரவை ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்திலும் தொடரக்கூடாது எனவும் புதிய அமைச்சரவையை நியமிக்க வேண்டும் என்றும் ரணில் விக்கிரமசிங்கவிடம் பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளதாம்.

தற்போது ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் கீழ் மீண்டும் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட அரசாங்கமானது கோட்டாபய ராஜபக்ஷவால் கடந்த முறை நியமிக்கப்பட்டது. அந்த அமைச்சரவையில் உள்ள பல அமைச்சர்கள் பொதுஜன பெரமுனவின் சித்தாந்தத்துக்கு முரணான கருத்துக்களைக் கொண்டிருப்பதால் அவர்களை பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்களாக கருதக்கூடாது என்று அந்த சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டதாம்.

பொதுஜன பெரமுனவின் சித்தாந்தத்துடன் முரணான கருத்துக் கொண்டிருப்பவர்கள் என்று சொல்வது, ராஜபக்ஷ குடும்பத்தினரை அமைச்சர்களாக நியமிப்பதை விரும்பாதவர்களையே குறிப்பிடுவதாகவும் ராஜபக்ஷ குடும்பம் இல்லாத அமைச்சரவை என்பது பொதுஜன பெரமுனவின் சித்தாந்தத்துக்கு முரணானது என்றும் அவர்கள் கருதுகின்றனர் என்று கூறப்படுகின்றது.

பெரமுனவின் இந்த யோசனையை - அல்லது விருப்பத்தை ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்ற, தொடர்ந்து மறுத்துவரும் பட்சத்தில் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்றிய கையோடு அதிரடி மாற்றங்களை செய்ய மகிந்த தரப்பு தயாராகி வருகின்றதாம்.

வரவு - செலவுத் திட்டத்தை குழப்பினால் பொருளாதார நெருக்கடியிலிருக்கும் நாட்டுக்கு மேலும் நெருக்கடி அதிகரிக்கும் என்பதாலும் அது தமக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்திவிடும் என்று நம்புவதாலுமே அதுவரை பொறுத்திருக்க அவர்கள் தீர்மானித்திருக்கின்றனர் எனக் கூறப்படுகின்றது.

இருபத்தியிரண்டாவது அரசமைப்பு திருத்தத்தில், இரட்டை பிரஜாவுரிமை உள்ளவர்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்க முடியாது என்ற சரத்தை நீக்கினால் மாத்திரமே அதனை தாங்கள் ஆதரிக்க முடியும் என்று பெரமுன திட்டவட்டமாக தெரிவித்திருப்பதும் இதன் பின்னணியிலேயே என்றும் கூறப்படுகின்றது.

ரணிலோடு தொடர்ந்து மல்லுக்கட்டுவதைவிட, மீண்டும் பஸில் ராஜபக்ஷவை களம் இறக்கி தீவிர அரசியலில் ஈடுபடுவது குறித்தும் இப்போது ஆலோசிக்கப்படுகின்றதாம்.

எனவே, பொதுஜன பெரமுனவின் ஆலோசனைகளுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதிய அமைச்சரவையை உருவாக்குவாரா அல்லது தனது முடிவில் உறுதியாக இருப்பாரா என்பது விரைவில் தெரியவந்துவிடும் என்று நம்பலாம்.

- ஊர்க்குருவி

# விசுவமடுவில் கல்விசார்ந்த 'அறுவடை போற்றல் விழா'!



முல்லைத்தீவு, ஒக். 18

விசுவமடு விஞ்ஞான கல்வி நிலையம் நடத்திய 'அறுவடை போற்றல் விழா' கடந்த சனிக்கிழமை விசுவமடு மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் 50இற்கும் மேற்பட்ட மாணவர்கள் மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட விஞ்ஞானத் துறைக்காகவும் 20இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலை மற்றும் வணிகத் துறைக்காகவும் விசுவமடு பிரதேசத்தில் இருந்து பல்கலைக்கழகங்களுக்கு தெரிவானமையை கௌரவிக்கும் முகமாகவும் தற்போது கற்கும் மாணவர்களுக்கு ஊக்கம் வழங்கும் முகமாகவும் இந்த விழா நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீ சற்குணராஜா கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். போதனா மருத்துவமனை பணிப்பாளரும் கிளிநொச்சி கல்வி அபிவிருத்தி நிலைய தலைவருமான மருத்துவர் த. சத்தியமூர்த்தி, பிரபல உயிரியல் ஆசான் வ.சி. குணசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர்

கௌரவ விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்வி பணிப்பாளர் ஞான. ஆத வன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி முதல்வர் ச. லலீசன் மற்றும் பிரதேச பாடசாலை அதிபர்கள் கலந்து கொண்டனர்.

கல்வி நிலையம் தொடர்பான நோக்க உரையை நிறுவனத்தை நெறிப்படுத்தி வரும் பொறியியலாளர் பொ. கெங்கேஸ்வரன் ஆற்றினார்.

மாணவர்களிடையே கல்வித் திறமை மற்றும் கலைத் திறமை சார்ந்த அடிப்படையில் சிவகுமார் கருஷா 'சாதனை மாணவி' என்ற விருதும் ரூபாய் 25 ஆயிரம் பணப் பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். துணைவேந்தர் மாணவிக்கான கௌரவத்தை வழங்கினார்.

(ஐ)

# கரைவலையில் சிக்கிய படகால் மீனவர் காயம்!

வடமராட்சி, ஒக். 18

வடமராட்சி கிழக்கு - கட்டைக்காடு பகுதியில் சம்மாட்டிகளின் அத்துமீறல்கள் அதிகரித்துள்ளது. சம்மாட்டிகளின் நடவடிக்கையால் நேற்றும் மீனவர் ஒருவர் காயமடைந்தார் என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொதுவாக காலை 6 மணியின் பின்னரே சம்மாட்டிகள் கரைவலை இழுக்க வேண்டும் என்பது விதியாக உள்ளது. இந்நிலையில், நேற்று அதிகாலை 4.20 மணிக்கே சம்மாட்டி ஒருவர் கரைவலையை வீசியுள்ளார்.

இந்த கரைவலையில் மீன்பிடி படகு ஒன்று சிக்கியது. படகில் இருந்த மீனவர்கள் இருவரில் ஒருவர் நங்கூரத்துடன் மோதுண்டதில் சிறு காயததுக்கு உள்ளானார். காயமடைந்த மீனவர் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சம்மாட்டியின் இந்த நடவடிக்கை தொடர்பில் மீனவர் சங்கத்துக்கு தெரியப்படுத்தப்பட்டதுடன், மருதங்கேணி பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக இந்தப் பகுதிகளில் சம்மாட்டிகள் இவ்வாறான செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்றும், எனவே அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சிறு படகு தொழிலாளர்கள் கூறுகின்றனர். (ஐ-02)

# 2 புதிய நுளம்பு வகை நாட்டில் அடையாளம்

கொழும்பு, ஒக். 18

இலங்கை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பூச்சியியல் திணைக்களத்தினால் இலங்கையில் இரண்டு புதிய நுளம்பு இனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

குலெக்ஸ் சின்டெலஸ் மற்றும் குலெக்ஸ் நியாயின்ஃபுலா ஆகிய இரு நுளம்பு இனங்கள் புதிதாக இனங்காணப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் தேசிய அமைப்பாளர் திஸ்னக திஸாநாயக்க தெரிவித்தார்.

பொதுவாக தாய்லாந்து மற்றும் இந்தியாவில் காணப்படும் குலெக்ஸ் சின்டெலஸ், இலங்கையின் மீரிகம மற்றும் களுத்துறை பகுதிகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நுளம்பு இனம் உலகம் முழுவதிலும் எந்தவொரு நோயையும் பரப்பும் காரணியாக இதுவரை அறியப்படவில்லையென திஸாநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, இந்தியாவில் பரவலாகக் காணப்படும் குலெக்ஸ் நியாயின்ஃபுலா என்ற நுளம்பு, பெருமூளை மலேரியா எனப்படும் நோயின் காவியாக அறியப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த 2 புதிய நுளம்பு இனங்களும் இலங்கையின் பல்லுயிரியலில் ஏற்படுத்தும் தாக்கம் மற்றும் பரவல் குறித்து மேலதிக ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக திஸாநாயக்க மேலும் கூறினார்.

இலங்கையில் கண்டறியப்பட்ட மேலும் 4 நுளம்பு இனங்களின் மாதிரிகள் அடையாளம் காண கொரிய பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# விநாடி வினா போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 18

யாழ். சேல்ஸ் போர்ஸ் ஒஹானா அனுசரணையில் சிறகுகள் அமையம் நடத்தும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிகழ்நிலை விநாடி வினா போட்டி - 2022இற்கான விண்ணப்பங்களை கோரியுள்ளது.

பரீட்சையில் கலந்துகொள்வோர் பதிவுகளை www.sirakukal.live எனும் இணையத் தளம் ஊடாக மேற்கொள்ள முடியும்.

மூன்று பிரிவுகளாக ( பிரிவு 1 : தரம் 6-8 ; பிரிவு 2 : தரம் 9 -11; பிரிவு 3 : தரம் 12 -13) இடம்பெறும் போட்டியின் முதற்சுற்றுப் போட்டி எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். (ஐ)

ஈழநாடு
Eelanadu
18.10.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 01

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# மகிந்தவின் மீள் பிரவேசம்?

அதிகாரத்திலிருந்து வெளியேறிய மகிந்த ராஜபக்ஷ மீளவும் மக்கள் முன் தோன்றியிருக்கின்றார். மீளவும் பொதுஜன பெரமுன மகிந்தவை முன்னிலைப்படுத்தி மக்கள் மத்தியில் பிரவேசித்திருக்கின்றது. தாங்கள் தவறு செய்து விட்டோம் என்னும் சுலோகமே மகிந்தவின் பிரதான கோஷமாக இருக்கின்றது. ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நாடு முன்நோக்கி நகர்வதான தோற்றம் தெரிகின்ற சூழலில்தான் மகிந்த ராஜபக்ஷ மீளவும் பொதுஜன பெரமுனவின் தலைமைத்துத்தை கையிலெடுத்திருக்கின்றார். கோட்டாபயவின் அணுகுமுறைகளில் தவறுகள் இருக்கின்றன - ஆனால், நானிருந்திருந்தால் இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டிருக்காது என்பதே மகிந்த ராஜபக்ஷவின் மீள்பிரவேசத்தின் கோஷமாக இருக்கின்றது.

அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்கு பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. அதேவேளை நெருக்கடிகள் அதிகரித்தால் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தை கலைக்கும் முடிவையும் எடுக்கக்கூடும். இவ்வாறானதொரு பின்னணியில்தான் மகிந்த ராஜபக்ஷ பொதுஜன பெரமுனவின் அடுத்த கட்டத்துக்கு தலைமையேற்க முன்வந்திருக்கின்றார். எவ்வாறெனினும் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் நாமல் ராஜபக்ஷ போட்டியிடுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு.

அது ஒரு விஷப் பரீட்சையாக முடிந்துவிடலாம். எனவே, பெருமளவுக்கு பிறிதொருவருக்கு ஆதரவளிக்கவே வாய்ப்புண்டு. அது யார் என்பதும் சிக்கலானது. அதேவேளை, பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியேறிருக்கும் டலஸ் அழகப்பெரும மற்றும் விமல் வீரவன்ஸ அணியினர் தனியாகத் தேர்தலை எதிர்கொள்ளும் வியூகங்கள் தொடர்பில் உரையாடி வருகின்றனர். இவ்வாறானதொரு பின்னணியில்தான் மகிந்த ராஜபக்ஷ நேரடியாகக் களத்தில் இறங்கியிருகின்றார். தற்போதுள்ள சூழலில் மகிந்த ராஜபக்ஷவை தவிர வேறு எவராலும் பொதுஜன பெரமுனவுக்கு தலைமை தாங்க முடியாது.

ஆனால், மகிந்த தலைமையில் பொதுஜன பெரமுனவுக்கு புத்துயிரளிக்கும் முயற்சி இடம்பெறுமாக இருந்தால் அடுத்த ஜனாதிபதி தேர்தல் குழப்பங்கள் நிறைந்ததாகவே இருக்க வாய்ப்புண்டு. அதாவது, பலம்பொருந்திய நாடுகளின் ஆடுகளமாக தேர்தல் மாற வாய்ப்புண்டு. இந்திய - அமெரிக்க கூட்டு ஒருபுறமும் சீனா மறுபுறமுமாக தேர்தல் களத்தில் தலையீடு செய்ய வாய்ப்புண்டு.

இந்தியா உடனடி அயல்நாடாக இருப்பதால் இலங்கை விடயங்களில் தலையீடு செய்ய வேண்டிய கட்டாயமுண்டு. இந்தியாவின் கொல்லைப் புறத்தில் சீனா வலுவாக காலூன்றியிருக்கின்றது. அதேவேளை இந்து சமுத்திர பிராந்தியத்தில் சீனாவின் வலுவான காலூன்றலை தடுத்து நிறுத்த வேண்டிய தேவைப்பாடு அமெரிக்காவுக்கு உண்டு. இந்த பின்புலத்தில் 2024 தேர்தல் அனைத்துத் தரப்பினராலும் கவனிக்கப்படும் தேர்தலாகவே இருக்கப் போகின்றது. சீனா ஏனைய நாடுகளில் தலையிடா கொள்கையை கொண்டிருப்பதாக கூறிக்கொண்டாலும்கூட நடைமுறையில் அப்படியிருக்க முடியாது.

ஏனெனில், இலங்கைத் தீவில் அதிக முதலீடுகளையும் நீண்டகால இலக்குகளையும் கொண்டிருப்பதால் சீனாவுக்கு உள்ளூர் மட்டத்தில் அரசியல் ஆதரவு கட்டாயமானது. இந்த பின்புலத்தில்தான் மனித உரிமைகள் தொடர்பான மேற்குலக அழுத்தங்களை சீனா தொடர்ந்தும் எதிர்த்து வருகின்றது. எனவே, சீனா நிச்சயமாக தென்னிலங்கை கட்சிகள்மீது செல்வாக்கு செலுத்தவே முயற்சிக்கும். அதேவேளை ஒரு தரப்பின்மீது மட்டும் கவனம் செலுத்தாது. ஒரே நேரத்தில் பெரிய கட்சிகள்மீதும் - அதேவேளை பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியேறி இருக்கும் சிறிய தரப்பினரையும் புறம்தள்ளாது. இந்த பின்புலத்தில் நோக்கினால் மகிந்தவின் மீள்பிரவேசம் மீளவும் இலங்கைத் தீவின் மீதான பலம் பொருந்திய நாடுகளின் பலப் பரீட்சையை தீவிரப்படுத்தலாம்.

# லெபனானில் ஏற்பட்டுள்ள நிலைமை இலங்கையிலும் ஏற்பட வாய்ப்புள்ளது

*கொழும்பு, ஒக். 18*

பொருளாதார நெருக்கடியை போக்க அரசாங்கம் உடனடியாக செயற்படாவிட்டால் லெபனானில் ஏற்பட்டுள்ள நிலைமை இலங்கையிலும் ஏற்பட வாய்ப்புள்ளதாக பிரித்தானிய ரீடிங் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் சாந்த ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

லெபனான் மற்றும் இலங்கையின் நிலைமையை ஒப்பிட்டு அவர் எழுதிய நீண்ட கட்டுரையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கட்டுரையில், ‘லெபனானின் வங்கி அமைப்பு காலவரையின்றி மூடப்பட்டுள்ளது. காரணம், வங்கிகள் வாடிக்கையாளர்களின் சேமிப்புத் தொகையை செலுத்த முடியாமல் திணறுகின்றன.

இதனால் ஆத்திரமடைந்த மக்கள் வங்கிகளை கொள்ளையடிக்கவும், வங்கி ஊழியர்களை பணயக்கைதிகளாக பிடிக்கவும் தொடங்கியுள்ளனர்.

தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலைக்கு அரசு பாதுகாப்பு அளிக்க முடியாததால், உறுப்பினர்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு வங்கிகளை மூட வங்கி சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

இதனால், பணத்தை வைப்பிலிட்டவர்கள் தங்கள் வங்கிகளில் நம்பிக்கை இழக்கும்போது, அவர்களது பணம் அனைத்தும் மணிநேரங்கள் அல்லது நாட்களுக்குள் திரும்பப் பெறப்படும். இதை ஆங்கிலத்தில் டீயமெ சுரளெ என்பார்கள். அதுதான் லெபனானில் நடந்தது. வங்கிகளில் பணப்புழக்கம் இல்லாதபோது, அது முழு நிதி அமைப்பையும் பாதிக்கிறது.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கிய பரிந்துரைகளில் இந்த ஆபத்து சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பரிந்துரையை அடுத்து, இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் அரச வங்கியின் 20வீத பங்குகளை விற்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்மொழிந்தார்.

வங்கிகளின் மூலதனத்தை அதிகரிப்பதில், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பிரச்னைகளை எதிர்கொள்ள முடியும். இல்லையெனில், அரசு வங்கிகளை தனியார்மயமாக்குவதற்கான முதல் படியாக இது இருக்கலாம்.

லெபனானின் 6.5 மில்லியன் மக்களில் 80 வீதம் பேர் தற்போது வறுமையின் அடிமட்டத்தில் உள்ளனர். இந்நாட்டு அரசால் இது வரை மக்களின் அடிப்படைத் தேவைகளை வழங்க முடியவில்லை.

லெபனானில் 23 மணி நேரமும் மின்சாரம் துண்டிக்கப்படுவதால் மக்களுக்கு அத்தியாவசிய மருந்துகள் மற்றும் உணவுகூட வழங்க முடியவில்லை.

ஆட்சியாளர்களின் திருட்டு, ஊழல், பண மோசடி, நிதி ஒழுக்கமின்மை என்பனவே, இவை அனைத்திற்கும் காரணம் என சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டுகிறது.

இலங்கையின் தற்போதைய நிலைமை அதற்கு மிக அருகில் இல்லையா? இது வரை இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் உற்பத்திப் பொருளாதாரம் என்று தம்பட்டம் அடித்துக் கொண்டார்கள், ஆனால் அதை மேம்படுத்துவதில் ஆர்வம் காட்டவில்லை.

மாறாக, இறக்குமதி செய்து நாட்டு மக்களை திருப்திப்படுத்துவதன் மூலம் தங்கள் கைக்கூலிகளின் பைகளை நிரப்ப முயன்றனர்.

தொடர்ச்சியான நிபந்தனைகளின் கீழ் லெபனானுக்கு 3 பில்லியன் டொலர் கடனை வழங்க சர்வதேச நாணய நிதியம் ஒப்புக்கொண்டுள்ளது.

அவர்கள் முன்வைத்துள்ள நிபந்தனைகளின் தொடரில் உள்ள நிபந்தனைகளில் ஒன்று ஊழலைத் தடுப்பது.

லெபனானின் காபந்து அரசாங்கம் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வருகிறது, ஆனால் அவர்களால் இது வரை நிலையான அரசாங்கத்தை அமைக்க முடியவில்லை.

அதன் காரணமாக நாணய நிதியம் வழங்கிய விரிவாக்கப்பட்ட நிதி வசதியை 4 ஆண்டுகளாக அவர்களால் பெற முடியவில்லை. இதனால், இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கும் லெபனானின் பொருளாதார நெருக்கடிக்கும் பல ஒற்றுமைகள் இருப்பதைக் காணலாம்.

வெளிநாட்டுப் பணம் பெறப்படாததால், இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து வருகிறது.

சுற்றுலாத்துறை முற்றிலுமாக நலிவடைந்துள்ளதால் டொலர்கள் வருவதில்லை என முறைப்பாடுகள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் கடன் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) 100.9 பில்லியன் டொலர்கள் ஆகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்க அரசாங்கம் மறைமுக வரிகளை அதிகரித்துள்ளது. எரிபொருள் மானியங்கள் நீக்கப்பட்டு அவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.


ஆனால் ஊழலைத் தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஊழலைத் தடுக்க வேண்டும் என்பது சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனையாகும்” என அவர் மேலும் கூறினார். (அ)

# காய்ச்சலால் குழந்தை சாவு!

*யாழ்ப்பாணம், ஒக். 18*

ஏழு நாட்களாக நீடித்த காய்ச்சலால் எட்டு மாதங்களேயான ஆண் குழந்தை ஒன்று உயிரிழந்தது. கிளிநொச்சி கணேசபுரத்தை சேர்ந்த குழந்தை ஒன்று காய்ச்சலுடன் சளி காணப்பட்டதால் கடந்த 14ஆம் திகதி யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தது. மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஐ-3)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஒக்ரோபர் - 18 செவ்வாய்க்கிழமை
சுபகிருது வருடம் - ஐப்பசி 01
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : நவமி




**மேடம்**
நீங்கள் நினைத்ததை நிறைவேற்றி மகிழ்வீர்கள். எதிர்பார்த்த பணம் வீடு தேடிவரும்.செயலில் முன்னேற்றம் காண்பீர்கள். பணியிடத்தில் ஏற்பட்ட பிரச்னைகளை சரி செய்வீர்கள். நிம்மதி ஏற்படும்.

**இடபம்**
கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். பொன் பொருள் சேர்க்கை உண்டு.வியாபாரத்தில் திருப்பம் ஏற்படும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். வரவேண்டிய பணம் வந்து சேரும். பழையகடனை அடைப்பீர்கள்.

**மிதுனம்**
புதிய முயற்சிகள் இழுபறியாகும். செயல்களில் தடுமாற்றம் உண்டாகும்.உங்கள் எதிர்பார்ப்பு தள்ளிப்போகும். மனதில் குழப்பம் ஏற்படும். பணியில் கூடுதல் கவனம் தேவை. பொறுமை அவசியம்.

**கடகம்**
உறவினர் ஒருவரால் சங்கடம் தோன்றி மறையும். வீட்டிற்கான செலவு அதிகரிக்கும். குடும்பத்திலுள்ள ஒருவரால் சிறு பிரச்னை தோன்றும். வார்த்தைகளில் கவனம் தேவை. நெருக்கடிகளை சந்திப்பீர்கள்.

**சிம்மம்**
உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழிலில் ஆதாயம் ஏற்படும். வி.ஐ.பிகளின் ஆதரவுடன் உங்கள் விருப்பம் ஒன்று நிறைவேறும்.தடைபட்டிருந்த செயல் நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கன்னி**
வியாபாரத்தில் உங்கள் அணுகுமுறை முன்னேற்றத்தை உண்டாக்கும் நாள்.பணிபுரியும் இடத்தில் உங்கள் ஆலோசனையை ஏற்பார்கள். உங்கள் மதிப்பு உயரும். செயலில் வெற்றி காண்பீர்கள்.

**துலாம்**
உங்கள் அணுகுமுறையால் நேற்றைய பிரச்னையில் தீர்வு உண்டாகும். ஒரு சிலருக்கு புதிய வேலை வாய்ப்பு அமையும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். ஊழியர்களின் ஆதரவு அதிகரிக்கும்.

**விருட்சிகம்**
பழைய பிரச்னை ஒன்று மீண்டும் தலையெடுக்கும். ஆவலுடன் எதிர்பார்த்த ஒன்று இழுபறியாகும். வீண் அலைச்சலும் செலவும் உண்டாகும். பயணத்தில் கவனம் தேவை. பண விஷயத்தில் எச்சரிக்கை அவசியம்.

**தனுசு**
நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். நண்பர்களால் ஆதாயம் அடைவீர். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நாளைய வேலைகளுக்காக இன்று முன்னேற்பாடு செய்வீர்கள்.

**மகரம்**
வியாபாரத்தில் இருந்த நெருக்கடி விலகும். மறைமுகத் தொல்லை அகலும். வழக்கு ஒன்று உங்களுக்கு சாதகமாகும். தொழிலில் விரோதிகள் விலகிச் செல்வர். உத்தியோகத்தில் உங்கள் நிலை உயரும்.

**கும்பம்**
பொன் பொருள் சேர்க்கை உண்டு. உறவினர்களால் ஏற்பட்ட தொல்லை விலகும். புதிய முயற்சி ஒன்றில் ஈடுபடுவீர்கள்.நீண்டநாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். குடும்பத்தின் தேவைகளை பூர்த்தி செய்வீர்.

**மீனம்**
எதிர்பார்ப்பு நிறைவேறும். நீங்கள் விரும்பிய ஒன்றை போராடி அடைவீர்கள்.பணியிடத்தில் சில சங்கடத்தை சந்திப்பீர்கள். அமைதி காப்பது நன்மையாகும். பிரச்னைகளுக்கு சுமூக முடிவு காண்பீர்கள்.

# ஹிந்தி திணிப்பை கைவிட்டு ஒற்றுமையை வளருங்கள்!

## பிரதமர் மோடிக்கு முதல்வர் கடிதம்

சென்னை, ஒக். 18

ஹிந்தியைத் திணிக்கும் முயற்சிகளைக் கைவிட்டு, ஒற்றுமையை வளர்க்கும் நடவடிக் கைகளில் ஈடுபட வேண்டும் என்று பிரதமரை முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில்,

மத்திய கல்வி நிறுவனங்களிலும், ஆள் சேர்ப்புக்கான தேர்விலும், கட்டாய தாள்களில்ஆங்கிலத்தை நீக்கிவிட்டு ஹிந்தியை முதன்மைப்படுத்தும் வகையில் பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன. இவை அனைத்தும் நமது அரசமைப்பின் கூட்டாட்சிக் கொள்கைகளுக்கு எதிரானவை. நாட்டின் பன்மொழிக் கட்டமைப்புக்கு தீங்கு விளைவிப்பதாக இவை அமைந்து விடும்.

அரசமைப்புச் சட்டத்தின் 8-வது அட்டவணையில், தமிழ் உள்ளிட்ட 22 மொழிகள் இடம்பெற்றுள்ளன. இவை அனைத்தும் சம உரிமையைக் கொண்டவை. இந்தியாவில், ஹிந்தி பேசும் மக்களைவிட, பிற மொழிகள் பேசும் மக்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. ஹிந்தி ஆதிக்கத்திலிருந்து நமது வளமான மற்றும் தனித்துவமான மொழிகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன்தான், ஆங்கிலம் இணைப்பு மொழியாக அங்கீகரிக்கப்பட்டு, மத்திய அரசின் அலுவல் மொழியாக நீடிக்கிறது. அனைத்து மாநில மொழிகளின் உரிமைகள், பாதுகாப்புக்காக தொடர்ந்து குரல் கொடுக்கிறோம்.

‘ஒரே நாடு“ என்ற பெயரில், ஹிந்தி மொழியை ஊக்குவிப்பதற்காக தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்வது பல்வேறு மொழிகள், பண்பாடுகளை கொண்ட இந்திய மக்களின் சகோதரத்துவத்தைச் சிதைப்பதுடன், ஒருமைப்பாட்டுக்கும் ஊறு விளைவிக்கும் என அஞ்சுகிறேன்.

பெருமைவாய்ந்த இந்திய ஒற்றுமைச் சுடரைத் தொடர்ந்து ஒளிரச் செய்ய வேண்டும் - என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# திருக்குறள் உள்ளிட்ட 46 நூல்கள் பிரெய்லி வடிவில் உருவாக்கம்!

சென்னை, ஒக். 17

பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில் திருக்குறள், தொல்காப்பியம் உள்ளிட்ட 46 தமிழ் நூல்கள் பிரெய்லி வடிவில் உருவாக்கப்பட்டுள்ளன என்று செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் தெரிவித்துள்ளது.

நன்னூல், தொல்காப்பியம், திருக்குறள், நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பரிபாடல், பதிற்றுப்பத்து, கலித்தொகை, அகநானூறு, புறநானூறு உள்ளிட்ட 46 தமிழ் நூல்களையும் பிரெய்லி நூல்களாக வெளியிடும் திட்டம் நிறைவுபெறும் நிலையில் உள்ளது. இதில் 41 நூல்கள் செவ்வியல் நூல்கள் ஆகும். இவை அனைத்தும் எளிய வடிவில் வடிவமைக்கப்பட்டுள்ளன. கடந்த மார்ச்சில் தொடங்கப்பட்ட இப்பணிகள் வரும் டிசெம்பரில் முடிவடையும். பின்னர், நூல்கள் அச்சிடப்பட்டு, பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# ராசா மீதான இந்துமத அவமதிப்பு வழக்கு உயர்நீதிமன்றால் தள்ளுபடி!

சென்னை, ஒக். 18

இந்து மதம் மற்றும் இந்துக்கள் குறித்து பேசிய தி. மு. க. பாராளுனமன்ற உறுப்பினர் ஆ. ராசாமீது நடவடிக்கை எடுப்பதற்கு முகாந்திராம் இல்லை என்ற பொலிஸ் தரப்பு வாதத்தை ஏற்றுக் கொண்ட சென்னை உயர் நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் 6ஆம் திகதி சென்னை பெரியார் திடலில் பேசிய ஆ. ராசா இந்து மதம் மற்றும் இந்து பெண்கள் குறித்து பேசிய கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்த விவகாரம் தொடர்பாக ஆ.ராசா மீது நடவடிக்கை எடுக்கக் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனுவில், ”ஆ.ராசாவின் பேச்சு இரு மதங்களுக்கு இடையே விரோதத்தை ஏற்படுத்தி , மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் உள்ளது. ராசாவின் பேச்சால் தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு பிரச்னை ஏற்பட்டுள்ளது.”, என்று சாடப்பட்டது.

இந்த வழக்கு நேற்று விசாரிக்கப்பட்டது. இதன்போது, பொலிஸ் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி, இந்த முறைப்பாடு தொடர்பில் ஆ. ராசாமீது நடவடிக்கை எடுக்க மத்திய குற்றப்பிரிவு பொலிஸூக்கு முகாந்திரம் இல்லை”, என்றார்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி மனுதாரர் வேண்டுமானால் கீழமை நீதிமன்றத்தை அணுக அனுமதியளித்து வழக்கை தள்ளுபடி செய்தார். (ஐ)

## அ.தி.மு.க. பொன்விழா ஆண்டு:

# பன்னீர்செல்வம், பழனிசாமி தனித்தனியே கொடியேற்றினர்!

சென்னை, ஒக். 18

அ.தி.மு.கவின் பொன்விழா ஆண்டு மற்றும் 51ஆம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு, கட்சியின் இடைக்காலப் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி ராயப்பேட்டையில் உள்ள தலைமை அலுவலகத்திலும், ஓ. பன்னீர்செல்வம் தியாகராயநகரில் உள்ள எம். ஜி. ஆர். நினைவு இல்லத்திலும் கட்சிக் கொடியை ஏற்றி வைத்தனர்.

அ.தி.மு.க.வின் பொன்விழா ஆண்டு நிறைவு மற்றும் 51-ம் ஆண்டு தொடக்க விழா நேற்று தொடங்கியது. இதன்போதே இருவரும் தனித்தனியாக கட்சிக் கொடியை ஏற்றினர்.

இதேசமயம், நேற்று நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தொடரின் முதல்நாள் கூட்டத்தை எடப்பாடி பழனிசாமி ஆதரவாளர்கள் யாரும் பங்கேற்காமல் கட்சியின் பொன்விழ தொடக்கவிழா நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

இதேநேரம், ஓ. பன்னீர்செல்வம் மற்றும் அவரின் ஆதரவு சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் கலந்து கொண்டனர். (ஐ)

# சீரற்ற காலநிலையினால் 14,309 குடும்பங்கள் பாதிப்பு

## 5,383 பேர் இடம்பெயர்வு

கொழும்பு, ஒக். 18

இலங்கையில் 11 மாவட்டங்களில் நிலவும் சீரற்ற காலநிலையால் 14 ஆயிரத்து 309 குடும்பங்களைச் சேர்ந்த 56 ஆயிரத்து 630 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளம் மற்றும் மண்சரிவால் மூவர் பலியாகியுள்ளனர். இருவர் காணாமல் போயுள்ளனர். 5 வீடுகள் முழுமையாகவும் 207 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன.

ஆயிரத்து 660 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. 36 பாதுகாப்பான இடங்களில் 5 ஆயிரத்து 383 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (அ)

# ரணில் - பஸில் இரகசிய பேச்சு?

## பொதுத் தேர்தலில் கூட்டணி அமைப்பது குறித்து





**கொழும்பு,ஒக்.18**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தொலைபேசியில் கலந்துரையாடியதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எவ்வாறு கூட்டணி அமைப்பது என்பது குறித்து அவர்கள் இதன்போது ஆலோசித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வேட்புமனு வழங்கும்போது ஐக்கிய தேசியக் கட்சியையும் அதன் தலைவரையும் விமர்சிக்கும் அல்லது கட்சியைவிட்டு வெளியேறிய எவருக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வேட்புமனுக்களை வழங்கக்கூடாது என இதன்போது தீர்மானிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை விமர்சித்து ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்புமனுக் களை எதிர் பார்ப்பவர்களுக்கும் வேட்புமனு வழங்குவதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் இணைந்து கூட் டணி அமைத்தால், அக் கட்சிகளுக்கு வழங்கப்படும் ஒதுக்கீட்டின் அடிப்படையில் அக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு வேட்புமனுக்கள் வழங்கப்படும் என முடிவு எட்டப்பட்டுள் ளதாகவும் அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன. (அ)

# கோழி-முட்டைத் தொழில் முடங்கும் அபாய நிலைமை

கொழும்பு, ஒக். 18

இலங்கையில் அடுத்த வருடம் கோழி மற்றும் முட்டை உற்பத்தி தொழில் பாரிய நெருக்கடியைச் சந்திக்கும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கால்நடைத் தீவனப் பற்றாக்குறை மற்றும் அதன் விலை அதிகரிப்பு, தாய் விலங்குகள் இறக்குமதி குறைந்துள்ளதே இதற்குக் காரணம் என்று அவர் கூறினார்.

எனினும், கால்நடை தீவனத்துக்குத் தேவையான 250,000 மெற்றிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்ய தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், கோழி இறைச்சி இறக்குமதி தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

இவற்றில் 80ஆயிரம் தாய் விலங்குகள் கடந்த வருடம் இறக்குமதி செய்யப்பட்ட போதிலும், டொலர் தட்டுப்பாடு காரணமாக இந்த வருடம் 7 ஆயிரம் மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# பெரும்போக விவசாயிகளுக்கான விவசாயக் கடன்கள் விநியோகம்



கொழும்பு, ஒக். 18

பெரும் போகத்திற்காக வங்கிகள் மூலம் விவசாயி களுக்கான பயிர்க் கடன்களை வழங்கும் நிகழ்வு நெடோல் பிட்டிய பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவி ருத்தி நிலையத்தில் நேற்று ஆரம்பமானது.

2022/2023 பெரும் போகத்திற்கான கடன்களை விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர நேற்று காலை கையளித்தார்.

பயிர்க்கடன் பயனாளிகள் 11 பேருக்கு தலா ரூ.50 ஆயிரத்தை அமைச்சர் வழங்கினார்.

பெரும் போகத்தில் 814,678 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் பயிரிடப்படவுள்ளது.

விவசாய கூட்டுறவு வங்கி மூலம் முன்னோடி திட்டமாக பயிர்களுக்கான கடன் வழங்குதல் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த ஆண்டு இதுவரை 207,103 விவசாயிகளுக்கு ரூ.7.1 பில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

ஒகஸ்ட் 2022 வரை 154,641 விவசாயிகள் ரூ.5.4 பில்லியன் பெறப்பட்ட கடன்களை திருப்பிச் செலுத்தியுள்ளனர். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அரசாங்கம் 350 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. (அ)

# குளவி கொட்டியமையால் 45 மாணவர்கள் பாதிப்பு!

வவுனியா, ஒக். 18

வவுனியா போகஸ்வெவ மத்திய கல்லூரியின் 45 மாணவர்கள் மற்றும் மூன்று ஆசிரியர்கள் குளவி கொட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று காலை கூட்டத்தின்போது இவர்கள் குளவி தாக்குதலுக்கு உள்ளானதாகவும், குளவி கொட்டியதில் இரண்டு மாணவர்கள் மற்றும் ஒரு ஆசிரியர் ஆபத்தான நிலையில் உள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

குளவி கொட்டுக்கு இலக்கான மாணவர்கள் பதவியா வைத்தியசாலை, வவுனியா பொது வைத்தியசாலை ஆகிய வற்றில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குளவி கொட்டுக்கு இலக்காகி வவுனியா பொது வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

# கொத்து ரொட்டி ரூ. 50 குறைந்தது!

கொழும்பு, ஒக். 18

கொத்து ரொட்டியின் விலை நேற்று முன் தினம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 50 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது என்று இலங்கை சிற்றுண்டி உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

கோதுமை மாவின் மொத்த விலை குறைக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த விலைகுறைப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது உணவகங்களில் கொத்து ரொட்டி ரூ.500 முதல் ரூ.1,000 வரை பல்வேறு விலைகளில் விற்கப்படுகிறது.

இரண்டு பேருக்குப் போதுமான - முழு கோழிக் கொத்தின் அதிகபட்ச விலை ரூ. 500 ஆக விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும் அந்தச் சங்கம் அறிவித்துள்ளது. (அ)

# பொலிஸ் நிலையத்தில் களவாடிய மோ.சைக்கிளை 10,000 ரூபாவுக்கு விற்றார் பொலிஸ் அதிகாரி!

கொழும்பு, ஒக். 18

போக்குவரத்து வழக்கு தொடர்பில் கைப்பற்றப்பட்ட ஸ்கூட்டர் ரக மோட்டார் சைக்கிளை பொலிஸ் அதிகாரி ஒருவரே களவாடி போதைப்பொருள் வியாபாரிக்கு 10,000 ரூபாவுக்கு விற்பனை செய்துள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மிரிஹான பொலிஸ் நிலையத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சந்தேகத்துக்குரிய கான்ஸ்டபிள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக மிரிஹான பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மிரிஹான தலைமையகப் பொலிஸாரின் போக்குவரத்துப் பிரிவினர் கடந்த 8ஆம் திகதி போக்குவரத்து விதி மீறலுக்காக இந்த மோட்டார் சைக்கிளை பொலிஸாரின் பொறுப்பில் எடுத்து நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து வழக்குப் பொருளாக பொலிஸ் பகுதியில் இந்த மோட்டார் சைக்கிள் வைக்கப்பட்டிருந்தது .

பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் 10,000 ரூபாவுக்கு குறித்த மோட்டார் சைக்கிளை வழங்கியதாகவும், சந்தேக நபர் கான்ஸ்டபிளின் உதவியுடன் லொறி ஒன்றில் அதை எடுத்துச் சென்றதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் சந்தேகநபர் மேற்கண்ட மோட்டார் சைக்கிளை பயன்படுத்தி போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுவதாக மிரிஹான ஊழல் தடுப்பு பிரிவினருக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 14 ஆம் திகதி குறித்த சந்தேக நபர் 40 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேற்படி மோட்டார் சைக்கிள் தொடர்பான விசாரணைகளின்போது மேற்கண்ட தகவல்கள் வெளியாகியுள்ளன.

வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மிரிஹான தலைமையக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)



# போதை மாத்திரைகளுடன் ஏழாலையில் மூவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 18

யாழ்ப்பாணம் ஏழாலைப் பகுதியில் போதை மாத்திரைகளுடன் மூவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு சுன்னாகம் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த மூவரும் கைது செய்யப்பட்டதுடன் , அவர்களிடம் இருந்து 296 போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட மூவரும் மேலதிக நடவடிக்கைக்காக , இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

குறித்த மூவரும் போதைப் பொருள் விற்பனை முகவர்கள் என தாம் சந்தேகிக்கப்பதாகவும் , மூவரிடமும் தொடர் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

(அ)

# கருவாட்டின் விலை குறைந்தது!

கொழும்பு, ஒக். 18

இலங்கையில் அத்தியவசிய உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்து வந்ததுடன் நெத்திலி உள்ளிட்ட கருவாடுகளின் விலைகளும் அதிகரித்து காணப்பட்டன.

கடந்த ஆறு மாதங்களாக காணப்பட்ட இந்த நிலைமையில் தற்போது மாற்றம் ஏற்பட்டுள்ளதாக கடுவாடு இறக்குமதியாளர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

கடுவாடுகளின் விலைகள் கடந்த ஆறு மாதங்களுடன் ஒப்பிடும்போது கருவாடுகளின் விலைகள் 35 வீதத்தில் இருந்து 40 வீதம் வரை குறைந்துள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட உலர் மீன்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உலர் மீன்களின் கையிருப்பு சரியான முறையில் பேணப்பட்டமை உட்பட பல காரணங்களினால், கருவாடுகளின் விலைகள் கணிசமாக குறைந்துள்ளதாகவும் இலங்கை கடுவாடு இறக்குமதியாளர்கள் சங்கம் கூறியுள்ளது.

(அ)

# வல்லையில் தொடரும் வழிப்பறி கொள்ளை!

## அச்சுவேலி பொலிஸார் பாராமுகம்

யாழ்ப்பாணம், ஒக். 18

**யாழ்ப்பாணம் வல்லைவெளி பகுதியில் தொடர் வழிப்பறி கொள்ளைகள் இடம்பெற்று வரும் நிலையில் அச்சுவேலி பொலிஸார் பாராமுகமாக உள்ளதாக பல தரப்பினராலும் குற்றம்சாட்டப்படுகிறது.**

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆள் நடமாட்டம் குறைவான வல்லைவெளிப் பகுதியில் மாலை மற்றும் முன்னிரவு வேளைகளில் மோட்டார் சைக்கிள்களில் நடமாடும் வழிப்பறிக் கொள்ளையர்கள் பெண்களை இலக்கு வைத்து வழிப்பறியில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை வேளை யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை பகுதிக்கு வல்லைவெளி ஊடாக மோட்டார் சைக்கிளில் பயணித்த வயோதிபப் பெண்ணின் 5 பவுண் நகை கொள்ளையடிக் கப்பட்டுள்ளது.

அவர்களின் மோட்டார் சைக்கிளை பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த இரு வழிப்பறி கொள்ளையர்கள் வல்லைப் பகுதியில் மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து பயணித்த வயோதிபப் பெண்ணின் தாலிக்கொடியை இழுத்து அறுத்துக்கொண்டு தப்பி சென்றுள்ளனர்.

அதனால் வயோதிபப் பெண் பயணித்த மோட்டார் சைக்கிள் நிலைதடுமாறி விபத்துக்கு உள்ளானது. அதனால் அதில் பயணித்த வயோதிபப் பெண் உள்ளிட்ட இருவர் காயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

குறித்த பகுதியில் கடந்த ஒரு வார காலப்பகுதிக்குள் ஐந்துக்கும் மேற்பட்ட வழிப்பறிச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

கடந்த வாரம் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு பெண்களை குறித்த பகுதியில் வழி மறித்த வழிப்பறிக் கொள்ளையர்கள் கத்தி முனையில் அவர்களிடம் இருந்து 11 பவுண் நகை மற்றும் பெறுமதியான கையடக்க தொலைபேசி என்பவற்றை கொள்ளையடித்து தப்பிச் சென்றுள்ளனர்.

அதுபோன்று வேலை முடித்து வீடு செல்லும் நோக்குடன் குறித்த பகுதிக்கு அண்மையில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் நின்ற பெண்ணொருவரின் தங்க சங்கிலி ஒன்றையும் வழிப்பறிக் கொள்ளையர்கள் அறுத்துச் சென்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணின் சங்கிலியை பிறிதொரு மோட்டார் சைக்கிளில் வந்த வழிப்பறிக் கொள்ளையர்கள் அறுத்துச் சென்றனர்.

அதேவேளை, குறித்த வழிப்பறியில் ஈடுபடும் கொள்ளைக் கும்பலை சேர்ந்தவர்கள் மோட்டார் சைக்கிள்களை திருடி வழிப்பறியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வாரம் வல்வெட்டித்துறைப் பகுதியில் திருடிய மோட்டார் சைக்கிளை பயன்படுத்தி பருத்தித்துறைப் பகுதியில் வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்.

வடமராட்சிப் பகுதிகளில் கடந்த ஒரு வார காலப்பகுதிக்குள் 10க்கும் மேற்பட்ட வழிப்பறி கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றத்தில் கடந்த 14ஆம் திகதி 3 பவுண் தாலி , 2 பவுண் சங்கிலி , மோட்டார் சைக்கிள், ஐ. போன் மற்றும் 3 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் என்பவற்றுடன் வடமராட்சி அல்வாய் பகுதியைச் சேர்ந்த 23 வயதான இளைஞன் பருத்தித்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வந்தவேளை மறுநாள் சனிக்கிழமை பொலிஸ் நிலைய மலசல கூட ஜன்னல் வழியாக தப்பி சென்றுள்ளார்.

தப்பிச் சென்ற நபரும், அவரது கும்பலைச் சேர்ந்தவர்களும் தலைமறைவாகியுள்ள நிலையில் பொலிஸார் அவர்களை கைது செய்வதற்கு உரிய நடவடிக்கையை தீவிரப்படுத்தி உள்ளனர்.

(அ)

# ஓய்வுபெறும் திகதிக்கு மூன்று மாதங்களுக்கு முன் ஓய்வூதிய விண்ணப்பத்தை அனுப்புவது அவசியம்

கொழும்பு, ஒக். 18

அரச ஊழியர்கள் தாம் ஓய்வுபெறும் திகதிக்கு மூன்று மாதங்களுக்கு முன் ஓய்வூதிய விண்ணப்பத்தை அனுப்புவது அவசியம் என ஓய்வூதிய திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் அரச ஊழியர்களுக்கான விசேட அறிவிப்பொன்றை ஓய்வூதியத் திணைக்களம் வழங்கியுள்ளது.

இந்த நடைமுறையை முறையாக பின்பற்றினால், ஓய்வுபெறும் அரச ஊழியர்கள் ஓய்வூதியப் பலன்களை ஓய்வுபெறும் நாளில் இருந்து வினைத்திறனாக பெற்றுக் கொள்ள முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இவ்வருடம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் டிசம்பர் 31ஆம் திகதிக்கு இடையில் 60 வயதை எட்டிய நிலையில் ஓய்வு பெறும் அரச ஊழியர்களின் எண்ணிக்கை 12 ஆயிரத்தை தாண்டும் என்றும் ஓய்வூதியத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்களின் ஊழியர்களின் கட்டாய ஓய்வு வயது 60 ஆக குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர்கள் கட்டாய ஓய்வு பெறும் வரை பணி நீடிப்புடன், ஓய்வு பெறுவதற்கான விருப்ப வயது 55ஆக குறைக்கப்பட்டுள்ளது.

திறைசேரிச் செயலாளரால் கையொப்பமிடப்பட்டு, அனைத்து, அரச நிறுவன தலைவர்கள், அரச வங்கிகள் மற்றும் சட்டப்பூர்வ சபைகள் உட்பட வணிக நிறுவனங்களின் தலைவர்கள் ஆகியோருக்கு, இது தொடர்பான புதிய சுற்றறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன.

அதன்படி, எந்தவொரு அதிகாரியும் இந்த வயது வரம்பைத் தாண்டி பணியாற்ற விரும்பினால், அவர், செயல் திறன் மற்றும் செயல்திறன் நிபந்தனைகளுக்கு உட்பட்டு சேவை நீடிப்புக்கு விண்ணப்பிக்காமல் 60 ஆண்டுகள் கட்டாய ஓய்வு வயது வரை தொடர்ந்து பணியாற்றலாம். எவ்வாறாயினும், 55-60 வயதுக்குள், ஒரு அதிகாரி தனது விருப்பப்படி பணியிலிருந்து ஓய்வு பெறலாம்.

தற்போது 60 வயதிற்கு மேல் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் இந்த ஆண்டு டிசெம்பர் 31 அல்லது அதற்கு முன் 60 வயதை நிறைவு செய்பவர்கள் டிசெம்பர் 31 ஆம் திகதிக்குள் ஓய்வு பெறவேண்டும் என்று சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# அஹுங்கல்ல துப்பாக்கிச் சூடு: சந்தேக நபர்கள் இருவர் கைது

கொழும்பு, ஒக். 18

அஹுங்கல்ல நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் இருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவர் 41 வயதான கமாண்டோ பிரிவின் சார்ஜன்ட் எனவும், கொலையைச் செய்வதற்கு ரி-56 துப்பாக்கியை வழங்கியவர் எனவும் பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி முகாம் இரண்டாம் கமாண்டோ படைப் பிரிவைச் சேர்ந்த ரி-56 - 2612651 ரக துப்பாக்கி எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர் நேற்று முன்தினம் கடமையில் ஈடுபட்டிருந்தபோது கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக அஹுங்கல்ல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சார்ஜன்ட் மெல்சிறிபுர பிரதேசத்தில் வசித்து வருபவர் என்பது தெரியவந்துள்ளது.

இதேவேளை, இது தொடர்பான துப்பாக்கிச் சூட்டுக்கு உதவிய மற்றைய சந்தேக நபர் 41 வயதுடைய மேகத்தன்ன பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

(அ)

# பெப்ரவரி மாத பிற்பகுதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்

## தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானம்

கொழும்பு, ஒக். 18

**எதிர்வரும் வருடம் மார்ச் 20ஆம் திகதிக்கு குறைந்தபட்சம் இரண்டு வாரங்களுக்கு முன்னதாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.**

சட்டத்தின்படி அன்றைய தினத்திற்குள் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் அமைக்கப்படவேண்டும் என ஆணைக்குழுவின் தலைவர் எஸ்.ஜி.புஞ்சிஹேவா தெரிவித்தார்.

எனவே, 2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாத பிற்பகுதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு தற்காலிகமாக முடிவு செய்துள்ளதாக அவர் மேலும் கூறினார்.

இந்த ஆண்டு பெப்ரவரி இறுதிக்குள் 18 வயதை பூர்த்தி செய்தவர்களை பட்டியலிடுவதன் மூலம் 2022 வாக்காளர் பதிவேட்டை இந்த மாத இறுதிக்குள் சான்றளிக்க தேர்தல்கள் ஆணைக்குழு எதிர்பார்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதன்பிறகு, செப்ரெம்பர் 30ஆம் திகதிக்குள் 18 வயது பூர்த்தியடைந்தவர்களின் பெயர்கள் அடங்கிய துணைப் பட்டியலைத் தயாரிக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

எனவே, 2022 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவேடு நவம்பர் நடுப்பகுதிக்குள் இறுதி செய்யப்படும் என்றும் இதன்மூலம் 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)



# அநுராதபுரம் விபத்தில் மூன்று பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 18

அநுராதபுரம்-பதெனிய வீதியில் இடம்பெற்ற விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காரொன்று வீதியைவிட்டு விலகி மரத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்துள்ளதுடன், இருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

விபத்தின்போது காரில் ஐந்து பேர் பயணித்துள்ளதாகவும் விபத்தில், காயமடைந்தவர்கள் குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# இலங்கைக்கு 12ஆவது இடம்!

கொழும்பு, ஒக். 18

தெற்காசியாவில் இலங்கை மட்டுமே பாதுகாப்பான சுற்றுலாத் தலமாக உள்ளதாக சுற்றுலா மற்றும் காணி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, உலகில் பாதுகாப்பான சுற்றுலாத் தலங்களைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் 12ஆவது இடத்தில் இலங்கை உள்ளதாக அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

வேல்ட் பாக்கர்ஸ் இணையத்தளத்தின் தரவுகளின்படி, உலக சுற்றுலாப் பயணிகள் கட்டாயம் பார்க்க வேண்டிய இடமாக சிகிரியா பட்டியலிடப்பட்டுள்ளதாக அந்த அமைச்சு அறிவித்துள்ளது.

ஐஸ்லாந்து, சுவிட்சர்லாந்து, டென்மார்க், நியூசிலாந்து, கனடா, ஸ்பெயின், போர்த்துக்கல், அயர்லாந்து, ஜப்பான், போலந்து மற்றும் அவுஸ்ரேலியா ஆகிய நாடுகள் அந்தப் பட்டியலில் இலங்கையைவிட முன்னணியில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# ஹற்றன் நகரில் கொள்ளையில் ஈடுபட்டுவந்த 5 பெண்கள் கைது!

கொழும்பு, ஒக். 18

ஹட்டன் நகரில் பணப்பைகளை கொள்ளையிட்டுவந்த ஐந்து பெண்கள் நேற்று ஹற்றன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

எதிர்வரும் தீபாவளி பண்டிகையின்போது, ஹற்றன் மற்றும் ஏனைய பெருந்தோட்டங்களை அண்டியுள்ள பிரதான நகரங்களுக்கு வரும் நபர்களிடமிருந்து தங்க ஆபரணங்கள் மற்றும் பணப்பைகளை திருடுவதற்காக இந்த ஐந்து பெண்களும் மற்றொரு குழுவுடன் ஹட்டன் நகருக்கு வந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்ட திருகோணமலை பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்து பெண்களும், ஊதுபத்தி விற்பனை செய்யும் போர்வையில் பணப்பைகள் மற்றும் தங்க ஆபரணங்களை திருடுவதாகவும் ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட 18-30 வயதுக்குட்பட்ட மேற்படி பெண்களிடம் பல பணப்பைகள் மற்றும் பல போதைப்பொருள் பொதிகள் இருந்ததாகவும், இதற்கு முன்னரும் இவர்கள் ஹற்றனின் கைது செய்யப்பட்டு ஹற்றன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட ஐந்து பெண்களும் மீண்டும் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# கடன் நெருக்கடியை சமாளிக்க அதிகபட்ச ஆதரவு வழங்கப்படும்

## இலங்கைக்கு பரிஸ் கிளப் உறுதி

கொழும்பு, ஒக். 18

இலங்கையின் தற்போதைய கடன் நெருக்கடியை சமாளிக்க அதிகபட்ச ஆதரவு வழங்கப்படும் என 22 கடன் வழங்கும் நாடுகளின் குழுவான பரிஸ் கிளப் தெரிவித்துள்ளது. இந்த விடயம் குறித்து இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, நேற்று திங்கட்கிழமை ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

இலங்கையின் கடன் நெருக்கடிக்கு விரைவில் தீர்வு காணும் முயற்சிகளுக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாக பரிஸ் கிளப்பின் இணைத் தலைவர் வில்லியம் ரூஸ் உறுதியளித்ததாக அவர் அந்தப் பதிவில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வருடாந்த கூட்டங்களின்போது பரிஸ் கிளப்பின் இணைத் தலைவர் வில்லியம் ரூஸை சந்தித்த போதே அவர் இந்த வாக்குறுதியை வழங்கினார் என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# இலங்கை வந்து 200 வருடங்கள் மலையக மக்கள் ஆர்ப்பாட்டம்!

நுவரெலியா, ஒக். 18

மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்களை கடக்கும் நிலையில் அவர்களுக்கு எந்த ஓர் உரிமையையும் எந்த அரசாங்கமும் கொடுக்கவில்லை. இதன் விளைவாக நிலம் உரிமை, மொழி உரிமை, கலாசார உரிமை அனைத்தையும் இழந்து நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்து நேற்று முன் தினம் ஹற்றன் நகரில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மலையக மக்களின் மாண்பை பாதுகாக்கும் அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா. சக்திவேலின் தலைமையில் இந்த போராட்டம் ஹற்றன் மல்லியப்பு சந்தியில் இடம்பெற்றது.

எதிர்ப்பு கோஷங்களை எழுப்பியவாறு, எதிர்ப்பு பதாதைகளை ஏந்தியவண்ணம் இந்த போராட்டம் முன்னெடுக் கப்பட்டது.

மலையக மக்கள் இலங்கையில் காலடி வைத்து எதிர்வரும் 2023ஆம் வருடத்தோடு 200 வருடங்கள் பூர்த்தியாகின்றன. இந்த நாட்டின் பொருளாதாரத்தில் மட்டுமல்ல அபிவிருத்தியிலும் இலங்கை பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவும் பங்காற்றியவர்கள். இவர்களின் வாழ்வு நிலை இன்று கேள்விக்குறியாகியுள்ளது.

சரியான மலையக அரசியல் தலைவர்கள் இன்மையால் தொடர்ந்து வரும் அரசாங்கம் மக்களை ஏமாற்றி வருகிறது. எனவே இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாகவே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இந்த போராட்டத்தில் பொது மக்கள், சமூக அமைப்பின் பிரதிநிதிகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலரும் இதில் கலந்து கொண்டனர். (ஐ)

# அரசாங்கத்தின் 40 எம். பிக்கள் சேர்ந்து பெரமுனவில் சுயாதீனமாக இயங்குவர்!

கொழும்பு,ஒக். 18

அரசாங்கத்தின் சுமார் 40 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் சுயாதீனமாக ஒரு புதிய அமைப்பை உருவாக்கவுள்ளதாக உயர்மட்ட வட்டாரம் ஒன்றை மேற்கோள்காட்டி ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த பாராளுமன்ற உறுப்பினர்களில் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க போன்ற சில அமைச்சரவை அமைச்சர்களும் அடங்குவர் என தெரிவிக்கப்படுகிறது.


ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து அரசாங்கத்தில் இணைந்த டயனா கமகே மற்றும் அரவிந்தகுமார் போன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் புதிய உருவாக்கத்துடன் இணைவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தலைமையிலான இரண்டு அணிகளும் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தலைமையிலான இரண்டு அணிகளும் ஏற்கனவே அரசாங்கத்திலிருந்து விலகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக

# ஷி ஜின்பிங் மூன்றாவது முறையாக தேர்வு செய்யப்படப்போவது எப்படி?

டேவிட் பிரௌன்



சீனாவின் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாடு அக்டோபர் 16ஆம் திகதி பெய்ஜிங்கில் தொடங்கியுள்ள நிலையில், இந்தக் கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் ஷி ஜின் பிங்கின் பதவிக்காலம் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது.

கட்சியில் இரண்டு முறை மட்டுமே பொதுச் செயலாளராக இருக்க முடியும் என்ற விதி கடந்த 2018ஆம் ஆண்டு மாற்றப்பட்ட நிலையில், தற்போது மூன்றாவது முறையாக அவர் பொதுச் செயலாளர் ஆவதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளது. இது சீனா மீதான அவரது பிடியை மேலும் இறுக்கும்.

அதோடு 69 வயதான ஷி ஜின்பிங் தனது எஞ்சிய வாழ்நாள் முழுவதும் அதிகாரத்தில் இருப்பதற்கான சாத்தியமும் உள்ளது. அக்டோபர் 16ஆம் திகதி தொடங்கவுள்ள அந்த மாநாடு, சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த கூட்டங்களில் ஒன்றாகும்.

### ஷி ஜின்பிங் தற்போது வகிக்கும் பதவிகள்

பொதுச் செயலாளர் என்ற முறையில் அவர் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக உள்ளார்.

அதிபர் என்ற முறையில் அவர் சீனாவின் தலைவர்.

சீனாவின் மத்திய ராணுவ ஆணையத்தின் தலைவராக அவர் நாட்டின் ஆயுதப் படைகளுக்கு தலைமை தாங்குகிறார்.




அவர் சீனாவின் உயர்ந்த தலைவர் என்றும் குறிப்பிடப்படுகிறார்.

### சீனாவின் தலைமைத்துவம்

இந்த மாநாட்டில் ஷி ஜின்பிங், தன்னுடைய பொதுச் செயலாளர் மற்றும் மத்திய ராணுவ ஆணையத் தலைவர் பதவியைத் தக்க வைத்துக்கொள்ள வாய்ப்புகள் உள்ளன. இந்த மாநாடானது ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும். அடுத்த ஆண்டின் வசந்த காலத்தில் நடைபெறும் வருடாந்திர தேசிய மக்கள் கூட்டத்தில் அதிபர் பதவியை அவர் தக்கவைத்துக் கொள்ளலாம்.

சுமார் 2,300 பிரதிநிதிகள் தியானன்மென் சதுக்கத்தில் உள்ள மக்கள் மண்டபத்தில் ஒரு வாரத்திற்கு கூடுவார்கள். அவர்களில் சுமார் 200 பேர் கட்சியின் மத்தியக் குழுவில் இணைவதற்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மேலும் 170 பேர் வரை மாற்று உறுப்பினர்களாக தேர்வு செய்யப்படுவார்கள்.

கட்சியின் முதன்மை கொள்கைக் குழுவான பொலிட் பீரோவிற்கு 25 பேரை மத்திய குழு தேர்வு செய்யும். பொலிட் பீரோ நிலைக்குழு உறுப்பினர்களை நியமிக்கும்.

மிகப்பெரும் தலைவர்களே நிலைக்குழு உறுப்பினர்களாக நியமிக்கப்படுவார்கள். கட்சியின் பொதுச் செயலாளர் ஷி ஜின்பிங் உட்பட 7 பேர் தற்போது அந்தப் பொறுப்பில் உள்ளனர். அவர்கள் அனைவரும் ஆண்கள்.

அனைத்து நடவடிக்கைகளும் இந்த மாநாட்டில் எடுக்கப்படுவதில்லை. பிரதான மாநாடு முடிந்த மறுநாள் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு கூடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. மூன்றாவது முறையாக அதிகாரம் வழங்கப்பட் டதும் உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரம் மற்றும் மிகப்பெரிய ராணுவப் படைகளுக்கு ஷி ஜின்பிங் தன்னுடைய தலைமையைத் தொடர்வார்.

தன்னுடைய மூன்றாவது ஐந்தாண்டு காலத்தில் அவர் சீனாவை இன்னும் எதேச்சதிகார அரசியல் நிலைப்பாட்டை நோக்கி தள்ளக்கூடும் என சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஷி ஜின்பிங் தலைமையில் சீனா சர்வாதிகார திசையில் நகர்வதாகக் கூறுகிறார் லண்டன் பல்கலைக்கழகத்தின் ஓரியண்டல் மற்றும் ஆப்ரிக்க ஆய்வுப் பள்ளியின் பேராசிரியர் ஸ்டீவ் சாங்.

“மாவோ தலைமையிலான சீனா ஒரு சர்வாதிகார அமைப்பாக இருந்தது. நாம் இன்னும் அந்த நிலையை அடையவில்லை. ஆனால், அந்தத் திசையை நோக்கிச் செல்கிறோம்” என்றும் அவர் கூறுகிறார்.

“ஷி ஜின்பிங்கின் சிந்தனை, கட்சியின் வழிகாட்டும் தத்துவமாக மேலும் பொறிக்கப்படுவதன் மூலம் கட்சியின் அமைப்பு சார்ந்த மாற்றங்களைக் காண முடியும்” என்கிறார் பேராசிரியர் ஸ்டீவ் சாங்.

ஷி ஜின்பிங் சிந்தனை என்பது சீன சோசலிசத்தின் தனி அடையாளம். இது தனியார் வணிகத்தில் நம்பிக்கையற்ற உறுதியான தேசியவாதத் தத்துவம். அவரது தலைமையின் கீழ் சீன அதிகாரிகள் பொருளாதாரத்தின் பல துறைகளில் உள்ள சக்தி வாய்ந்த நிறுவனங்களை ஒடுக்கியுள்ளனர்.

“ஷி ஜின்பிங்கிற்கு மீண்டும் அதிகாரம் கையளிக்கப்பட்டால், அவர்கள் திறம்பட அவரை சர்வாதிகாரியாக மாற்றுவார்கள்” என்கிறார் பேராசிரியர் சாங்.

மாநாட்டில் அமைக்கப்படும் சீனாவின் உயர்மட்ட தலைமைக் குழு, பெரிய அளவிலான கொள்கைகளை உருவாக்கும்.

பொருளாதாரம், அரசியல், ராஜதந்திர நடவடிக்கை மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான விஷயங்களில் சீனாவின் எதிர்கால நகர்வுகள் தொடர்பான எந்தக் குறிப்பும் உலகம் முழுவதும் கவனிக்கப்படும்.

### பொருளாதார சவால்கள்

சமீபத்திய தசாப்தங்களில் சீனாவின் பொருளாதாரம் வளர்ச்சி கண்டிருந்தாலும், கொரொனா பொதுமுடக்கம், விலைவாசி அதிகரிப்பு மற்றும் சொத்து நெருக்கடி ஆகியவற்றின் காரணமாக தற்போது கடும் நெருக்கடிகளை சீனா எதிர்கொள்கிறது.

உக்ரேய்ன் போரினால் உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மந்தநிலை பற்றிய வளர்ந்து வரும் அச்சங்களும் சீனாவின் நம்பிக்கையை சேதப்படுத்தியுள்ளன.

சீன தொழிலாளர்களுக்கு அதிக வருமானம் மற்றும் நல்ல வேலைகளை வழங்குவதில் கம்யூனிஸ்ட் அரசாங்கத்தின் சட்டப்பூர்வமான தன்மையில் தேக்கம் இருப்பதாக சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். எனவே அடுத்த ஐந்து ஆண்டுகளில் மோசமான பொருளாதார செயல்திறன் ஷி ஜின்பிங்குக்கு கடும் அரசியல் சிக்கலை ஏற்படுத்தலாம்.

சீனாவின் பூஜ்ஜிய கொரோனா அணுகுமுறை ஷி ஜின்பிங்கின் முக்கிய கொள்கைகளில் ஒன்றாகும். உலகின் பெரும்பகுதி இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ள நிலையில், சீன அதிகாரிகள் கடுமையான முடக்கம், சோதனைகள் மற்றும் நீண்ட தனிமைப்படுத்தல்களுடன் கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

சமீபத்திய வாரங்களில் ஷென்சென் மற்றும் செங்டு உட்பட 70க்கும் மேற்பட்ட நகரங்கள் முழு அல்லது பகுதியளவு முடக்க நடவடிக்கைகளின் கீழ் இருப்பதாக அறிக்கைகள் கூறுகின்றன. இதனால் பல்லாயிரக்கணக்கான குடியிருப்பாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு, பெரும் எண்ணிக்கையிலான வணிகங்கள் சீர்குலைந்துள்ளன.

தனது கொரோனா கொள்கையைச் சிதைக்கும், சந்தேகிக்கும் அல்லது மறுக்கும் எந்தவொரு வார்த்தை மற்றும் செயல்களுக்கு எதிராக உறுதியுடன் போராடுவேன் என ஷி ஜின்பிங் உறுதியளித்துள்ளார்.

இந்த மாநாட்டின்போது, ஷி ஜின்பிங்குடைய திறமையின் பிம்பத்தை சேதப்படுத்தும் நிகழ்வு நடைபெறும் அபாயம் உள்ளது.

தொற்றுநோய்க்கு எதிரான வெற்றியை அறிவிக்கவும் பூஜ்ஜிய கொரோனா கொள்கையை முடிவுக்குக் கொண்டுவரவும் இந்த மாநாட்டை கம்யூனிஸ்ட் கட்சி பயன்படுத்தக்கூடும் என்று சில பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

மாறாக, மற்ற நாடுகளைப் போல் இல்லாமல் பொருளாதாரத்தைவிட மக்களின் உயிருக்கு சீனா மதிப்பளிக்கிறது. இந்தக் கொள்கை தொடரும் என்றும் கட்சி கூறலாம்.

### தாய்வான் மற்றும் மேற்கு நாடுகள்

மேற்கத்திய நாடுகளுடனான உறவுகளில், குறிப்பாக தாய்வான் விவகாரத்தில் கடுமையான அணுகுமுறையை ஷி ஜின்பிங் கடைபிடிக்கிறார்.

கடந்த ஆகஸ்ட் மாதம் அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் தாய்வானுக்கு சுற்றுப்பயணம் சென்றதற்கு எதிர்ப்பு தெரிவித்து, தீவைச் சுற்றி ஏவுகணை ஏவுதலை உள்ளடக்கிய ராணுவப் பயிற்சிகளை சீனா மேற்கொண்டது. தாய்வானை பெய்ஜிங்கின் கட்டுப்பாட்டில் இருக் கும் ஒரு பிரிந்து சென்ற மாகாணமாக சீனா பார்க்கி றது. ஆனால், தாய்வான் தன்னை தனிநாடாகக் கருதுகிறது.

சீன மக்கள் குடியரசின் நூற்றாண்டு விழா 2049ஆம் ஆண்டில் கொண்டாடப்பட இருக்கும் நிலையில், அதற்குள் தாய்வானுடனான மறு ஒருங்கிணைப்பு நிறைவேற்றப்பட வேண்டும் என்று ஷி ஜின்பிங் கூறியுள்ளார்.




சீனா தாய்வானை கைப்பற்றினால் மேற்கு பசிபிக் பெருங்கடல் மற்றும் அதற்கு அப்பால் உள்ள பகுதிகளில் அமெரிக்காவின் பலம் குறையும் என்று பாதுகாப்பு நிபுணர்கள் கூறுகின்றனர்.

“முதல் தீவு சங்கிலி“ என அறியப்படும் தொகுப்பில் ஒரு பகுதியாக இருக்கும் தாய்வான், மேற்குலக நாடுகளின் வியூக வகுப்பில் அதி முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக உள்ளது. பல தசாபதங்களாக அமெரிக்காவுடன் இணைந்துள்ள பல பகுதிகளும் இதன் ஒருபகுதியாக உள்ளன.

(பிபிசி)

# புதுடில்லியில் ஈழத் தமிழர் மாநாடு:

## இலங்கை அரசுக்கு கடுமையான செய்தி!

— வாணன்

35 வருடங்களுக்குப் பின்னர் புதுடில்லியில் ஈழத்தமிழர் விவகாரம் பற்றி 10 ஒக்டோபர் 2022 அன்று இந்திய அரசுசார் முக்கியஸ்தர்களுடனான ஈழத்தமிழர் சந்திப்பும், நட்புறவு பேச்சுக்களும் முதற்கடவையாக இடம்பெற்றிருக்கிறது.

இது இன்றைய நாளில் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு. 1987 ஒக்டோபர் 10 இந்திய - இலங்கை ஒப்பந்தம் முறிவும், இந்திய அமைதிப் படையுடன் விடுதலைப் புலிகள் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட 35 ஆவது ஆண்டு நிறைவு நாளில் இருதரப்பும் கைகுலுக்கி புதிய நட்புறவு ஒன்றை வளர்க்க முற்பட்டுள்ளனர்.

### ஈழத் தமிழர்களின் அரசியல் மைல்கல்

இந்த நிகழ்வு சரி பிழைகளுக்கு அப்பால் வெற்றி தோல்விகளுக்கு அப்பால் மீண்டும் ஒருமுறை ஈழத் தமிழர் சார்ந்த விவகாரத்தில் டில்லியை மையப்படுத்திய ஈழத் தமிழர்களின் அரசியல் வழி அல்லது கதவு திறக்கப்பட்டிருப்பது ஒரு மைல்கல்தான்.



உலகளாவிய ரீதியில் 33 நாடுகளில் விடுதலைப் புலிகள் இயக்கம் செயற்பட தடை செய்யப்பட்டிருக்கிறது. இந்தியாவில் 1991 ஆம் ஆண்டில் இருந்து விடுதலைப் புலிகள் அமைப்பு இந்திய மண்ணில் எந்த செயற்பாட்டையும் மேற்கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டது.


ஈழத் தமிழர்களின் அண்டை நாடான இந்தியாவின் இத்தடையானது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மிகவும் பாரதூரமான பின்னடைவாகும். தமிழ் மக்களுடைய விடுதலைப் போராட்டத்தின் பேரழிவிக்கான காரணங்களில் இத்தடையும் ஒன்றாக அமைந்துவிட்டது.

**ஈழத் தமிழர்கள் புதுடில்லியில் ஒரு மாநாட்டை இந்திய காவல்துறையின் அனுமதியுடன் நடத்தியதன் மூலம் இலங்கை அரசுக்கு ஒரு கடுமையான செய்தியும் சொல்லப்பட்டுவிட்டது. இலங்கையை மீறி இந்தியா ஈழத் தமிழர் விவகாரங்களில் தலையிடுவதற்கு தயாராகிவிட்டது என்பதும் இந்திய அரசின் வெளிவிவகார விடயங்களில் மாற்றங்கள் ஏற்படப் போகின்றது என்பதுதான் அந்தச் செய்தி.**

### விடுதலைப் புலிகள் மீதான தடை

இந்தத் தடையானது விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது விதிக்கப்பட்டது என்று கூறப்பட்டாலும் "ஒரு செயல் அது தரவல்ல விளைவுகளின் அளவிலிருந்து தான் அச்செயல் பற்றி எடை போடப்பட வேண்டும்" என்பதைக் கருத்தில் கொண்டு நோக்கினால் விடுதலைப் புலிகள் மீதான இந்தியாவின் தடையானது உண்மையில் ஈழத் தமிழர் யாவரும் அந்தத் தடையின் கட்டுக்குள் அடங்கி அடக்கப்பட்டதாகவே நடைமுறையில் செயற்பட்டதைக் காணலாம்.

ஈழத்தமிழர், தமிழீழம். விடுதலைப் புலிகள், என்ற சொல்லாடல்களை பயன்படுத்தி இந்திய மண்ணில் மாநாடுகளையோ, கூட்டங்களையோ அல்லது பேச்சுக்களையோ சட்ட பூர்வமாக நடத்த முடியாத ஒரு இறுக்கமான சூழல் உருவாக்கப்பட்டிருந்தது. இங்கே பேச்சுக்கள் என்கின்றபோது பல்வேறுபட்ட தனிநபர்கள் பின்கதவாலும், மறைமுகமாகவும் இந்தியப் பிரதிநிதிகளுடன் பேசி இருக்கக் கூடும். ஆனால் பகிரங்கமாக ஒரு பொது மேடையில் பேசுவதற்கு எந்த வாய்ப்பும் இல்லை. இருந்ததும் கிடையாது என்பதுதான் உண்மை.



இந்திய பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜோச் பெர்னாண்டஸ் ஒருமுறை 13 நவம்பர் 2000 அன்று புதுடில்லியில் ஈழத்தமிழர் சார்ந்த ஒரு பொதுக் கூட்டத்தைக் கூட்டி இருந்தார்.

அந்தக் கூட்டம் அன்றைய நாளில் இந்திய காவல் துறையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு மண்டபத்தில் கூட்டம் நடத்துவதற்கு அனுமதி மறுக்கப்பட்டு தடை விதிக்கப்பட்டது. இப்படி பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஒருவரால் கூட்டம் நடத்த முடியாத சூழல் ஏற்பட்ட போது தனது வீட்டுக்குள்ளேயே ஒரு கூட்டத்தை நடத்த வேண்டிய நெருக்கடிக்கு இந்திய பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜோச் பெர்னாண்டஸ் தள்ளப்பட்டார் என்பதிலிருந்து இந்தத் தடை எவ்வளவு இறுக்கமாகவும் வலிமையாகவும் இருந்தது என்பதனை புரிந்துகொள்ள முடியும்.



அவ்வாறே இந்த வருடம் 21 மே நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் கூட்டம் ஒன்று தமிழகத்தில் நடாத்தப்பட்ட போது அக்கூட்டம் நடத்துவதற்குதடை விதிக்கப்பட்டது மாத்திரமல்ல, கூட்டம் நடத்திய தமிழக அரசியல் பிரமுகர்கள் கைது செய்யப்பட்டு பின் விடுவிக்கப்பட்டனர். ஆனால் ஈழத் தமிழர்கள் யாரும் அங்கு கைது செய்யப்படவில்லை என்றாலும்கூட, கூட்டத்துக்கு தடை விதிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இந்த வருடம் கறுப்பு ஜூலையை முன்னிட்டு உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் உட்பட்டோர் டில்லியில் ஈழத் தமிழர்களின் கறுப்பு நாளை நினைவு கூர்வதற்கு கருத்தரங்கு ஒன்றை 30-07-2022 அன்று நடத்த முற்பட்ட போது அந்த இனவழிப்பு நினைவு நாள் நிகழ்வு இந்திய காவல் துறையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு நிகழ்வு நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டது என்பதனை இங்கே கவனத்தில் கொள்ளவேண்டும்.

### ஈழத்தமிழர் மாநாடு

இத்தகைய பின்னணியில் இலங்கை அரசாங்கம் இந்திய மண்ணில் ஈழத் தமிழர்கள் சார்ந்த கூட்டங்களையும் கருத்தரங்குகளையும் நடத்த முடியாது என்ற நம்பிக்கையில் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு இருந்த நிலையில் இம்மாதம் ஒக்டோபர் 10ஆம் திகதி புதுடில்லியில் ஈழத் தமிழர் தேசிய இனப் பிரச்சினை சார்ந்து ஒரு பொதுக் கூட்டத்தை ஈழத் தமிழர்கள் பல்வேறுபட்ட சாத்தியமான வழிகளை மிக நுணுக்கமாக கையாண்டு இன்றைய உலகளாவிய அரசியல் போக்கு மாற்றத்தினை கவனித்து அதற்கு ஏற்ற வகையில் இந்திய அரசின் அனுமதி பெற்று இந்த ஈழத்தமிழர் மாநாட்டினை டில்லியில் நடத்தி முடித்துள்ளனர்.

இந்த நிகழ்வில் புலம்பெயர் தமிழர்களையும் தாயகத் தமிழர்களையும் கலந்து கொள்ளும்படி மகாநாட்டு குழுவினரால் பகிரங்க அழைப்பும் விடப்பட்டது. உண்மையான இலட்சியப் பற்றுள்ள தமிழர் நலன் சார்ந்த நபர்களும் அமைப்புகளும் இந்த மகாநாட்டு அழைப்பின் பிரகாரம் டில்லியில் ஒரு மண்டபத்தில் ஒன்றுகூடி எந்த தடைகளும் இன்றி நிகழ்வை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளனர்.

இந்த நிகழ்வில் இந்திய அரசு சார்ந்த பிரமுகர்களும் இந்திய அரசியலை நிர்ணயம் செய்கின்ற பல்வேறுப்பட்ட அமுக்க குழுக்களின் முக்கிய பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

அந்த நிகழ்வில் முன்னாள் போராளிகள் பலரும் கலந்து கொண்டு இந்திய முக்கிய பிரமுகர்களுடன் தமது நிலைப்பாடுகள் பற்றியும் எதிர்கால இந்து சமுத்திரம் பாதுகாப்பு பற்றியும் பேசினர் என்பதும் இங்கே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களாகும்.

இவ்வாறு ஈழத் தமிழர்கள் புதுடில்லியில் ஒரு மாநாட்டை இந்திய காவல் துறையின் அனுமதியுடன் நடத்தியதன் மூலம் இதுவரை காலமும் சட்ட ரீதியாக இருந்து வந்த தடை என்கின்ற முறைமை இப்போது நடைமுறை ரீதியாக தளர்த்தப்பட்டிருக்கிறது.

ஒரு நீதிமன்ற தீர்ப்பும், நடைமுறையும் சட்டத்துக்கு சமனானது. இப்போது இந்த மாநாடு நடைமுறை முன்னுதாரணமாகி விட்டது. எனவே இந்த முன்னுதாரணத்தை பின்பற்றி இனிவரும் காலத்தில் ஈழத் தமிழர் தரப்பில் யாராக இருந்தாலும் புதுடில்லியில் மாநாடுகளையும் கூட்டங்களையும் நடத்த முடியும் என்பது மகிழ்ச்சியான விடயம்தான்.

ஆகவே இனி வரும் காலங்கள் இந்தியாவின் அனைத்து மாநிலங்களின் தலைநகரங்களிலும் இத்தகைய கூட்டங்களையும் மாநாடுகளையும் நடத்துவதற்கான வாய்ப்புகளும் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு விட்டது.

அதேவேளை, இலங்கை அரசுக்கு ஒரு கடுமையான செய்தியும் சொல்லப்பட்டுவிட்டது. இலங்கையை மீறி இந்தியா ஈழத் தமிழர் விவகாரங்களில் தலையிடுவதற்கு தயாராகிவிட்டது என்பதும் இந்திய அரசின் வெளிவிவகார விடயங்களில் மாற்றங்கள் ஏற்படப் போகின்றது என்பதுதான் அந்தச் செய்தி.

அத்தோடு இலங்கைக்கு எதிராக இந்திய மண்ணில் இருந்து ஜனநாயக ரீதியில் செயற்படுவதற்கான வழி ஒன்று திறந்து விடப்பட்டுவிட்டது என்பதும் கவனத்திற்குரியது.

இத்தகையதொரு வாய்ப்பான மாற்றம் ஏற்பட்டிருப்பதைக் கருத்திற் கொண்டு மேலும் பல்வேறு முன்னெடுப்புக்களை ஈழத்தமிழர் சார்ந்த பல்வேறு அமைப்புக்களும் சக்திகளும் மேற்கொள்ள வேண்டியது அவசியம். இது ஓர் அடைபட்ட கதவு அனைவர்க்கும் திறபட்ட மாதிரியானது.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

**மாதிரிப் பரீட்சை வினாத்தாள்**

கல்வி tv CHANNEL

**06) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i) நான் ........................................ (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .................................... (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் .................................................. (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம்.

(3 புள்ளிகள்)

**07) பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

i) ஆற்றிலே போட்டாலும் ......................................................................

ii) ..................................................... குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

**08) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

i) பலா கன்று போல பயிர் : ..........................................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : .................................................. (2 புள்ளிகள்)

**09) பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.**

i) தம்பி தண்ணீரை ............................... (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................ (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது.

(2 புள்ளிகள்)

**10) தனிச்சொல்லை எழுதுக.**

i) வீண் செலவு செய்பவன் : ..............................................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : .................................................... (2 புள்ளிகள்)

**11) கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) Bread : ............................ ii) Cloud : ............................ (2 புள்ளிகள்)

**12) தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.**

i)  ..................................

ii)  ..................................

(2 புள்ளிகள்)

**13) பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.**

i) do / like? /What / you : ..........................................................................

ii) old / How / you? /are : ........................................................................... (2 புள்ளிகள்)

**14) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) ரோஹல : ..........................................................

ii) தொளஹ : ........................................................ (02 புள்ளிகள்)

**15) பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

i) சோறு சாப்பிடுங்கள் : ..........................................................................................

ii) அங்கே பாருங்கள் : ........................................................................................ (02 புள்ளிகள்)

❖ **விடை எழுதுக.**

**16)** 7 8 / 3 0 — இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

..............................................................

**17)** ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

...........................................................................

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| **06.** | 1) ஆவணி | 2) வாள் | 3) சுற்றுலா |
| **07.** | 1) அளவறிந்து போடு | 2) குற்றமுள்ள நெஞ்சு | |
| **08.** | 1) நாற்று | 2) தாள் | |
| **09.** | 1) மடமட | 2) தக தக | |
| **10.** | 1) ஊதாரி | 2) விமானி / வலவன் | |
| **11.** | 1) பாண் | 2) முகில் | |
| **12.** | 1) Star | 2) Table | |
| **13.** | 1) What do you like? | 2) How old are you? | |
| **14.** | 1) வைத்தியசாலை | 2) பன்னிரண்டு | |
| **15.** | 1) பத் கன்ன | 2) எத்தன பலன்ன / எஹே பலன்ன /அத்தன பலன்ன | |
| **16.** | 8 730 | **17.** 7 309 | |

கல்வி tv CHANNEL-1

**18.10.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**18.10.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



## திருமலையில் அரவிந்தகுமார்

திருமலை, ஒக். 18

கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ. அரவிந்தகுமார் நேற்று முன் தினம் திருகோணமலை வலயக்கல்வி அலுவலகத்துக்கு விஜயம் செய்தார்.

இதன்போது திருகோணமலைக் கல்வி வலயத்தினால் மேற்கொள்ளப்பட்ட கடந்த கால நிகர் நிலை, நிகழ் நிலை கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் சமகாலக் கல்விச் செயற்பாடுகள் பற்றி திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். சிறீதரனைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதனைத் தொடர்ந்து திருகோணமலை வலயக்கல்விப் பணிமனையினால் முன்னெடுக்கப்பட்ட, முன்னெடுக்கப்படுகின்ற கற்றல்-கற்பித்தல் மற்றும் கற்றல் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் பற்றி திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளரால் முன்னேற்ற மீளாய்வு தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

திருகோணமலைக் கல்வி வலயத்தின் கற்றல் சார் முன்னெடுப்புக்களை கல்வி இராஜாங்க அமைச்சர் வெகுவாகப் பாராட்டியிருந்ததுடன், திருகோணமலை வலயக்கல்வி அலுவலக உள், வெளிக் கட்டமைப்புக்களையும் அமைச்சர் பார்வையிட்டு ஆலோசனைகளையும், பின்னூட்டல்களையும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# ஒன்றுபட்டால்தான் தமிழர் சமஷ்டி தீர்வை எட்டலாம்

### கூறுகிறார் சிவசக்தி ஆனந்தன்





மட்டக்களப்பு, ஒக். 18

இந்த நாட்டில் தமிழ் மக்களை எள்ளிநகையாடி,ஏளனமாக நினைத்து ஆட்சிக்கு வரும் ஸ்ரீ லங்கா அரசு ஏமாற்றி வருகின்றது. இதற்கான பிரதான காரணம் தமிழ்கட்சிகளின் ஒற்றுமையின்மை ஆகும். ஒன்றுபட்டால்தான் தமிழ் மக்களுக்கு சமஷ்டி தீர்வு கிடைக்கும் என வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

ஈழப்போராட்ட வரலாற்றில் தமிழ்மக்கள் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் வாழ்வதற்கு தன்னுயிர்களை ஈர்ந்து உவந்தளித்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னனியின் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு பெரியகல்லாறு மெதடிஸ்த மண்டபத்தில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபை உறுப்பினர் சண்முகநாதன் கணேசநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கட்சியின் செயலாளார் வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், மக்கள் முன்னேற்றக் கட்சியின் தலைவர் அருண் தம்பிமுத்து, கட்சியின் உபதலைவர் தோழர் சர்மா மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள், பொதுமக்கள், மதத்தலைவர்கள் கலந்துகொண்டு தியாகிகளுக்கு மலர்கள் தூவி, ஈகைக்சுடர் ஏற்றி இறைவணக்கம் செலுத்தப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் தியாகிகளின் குடும்பங்களுக்கு பொன்னாடை போற்றி,தியாகிகளின் உருவப்படங்களும் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இங்கு வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கருத்து தெரிவிக்கையில்-

ஈழவிடுத்தலைப் போராட்டம் தோல்வியுற்றதற்கான பிரதான காரணம் தமிழ்கட்சிகளும், பல இயக்கங்களின் ஒற்றுமையின்மையே காரணமாகும். இதனை அனைத்து கட்சிகளும், அமைப்புகளும், இயக்கங்களும் ஏற்றுக்கொள்ளனும். தமிழர்களை பொறுத்தவரையில் பிரிந்து செல்லாமல் அனைவரும் ஒற்றுமைப்பட்டு தமிழ்மக்களின் நலனுக்காக தூரநோக்கு சிந்தனையுடன் செயற்படவேண்டும்.

இன்று இந்தநாட்டில் தமிழ்மக்களை எள்ளிநகையாடி, ஏளனமாக நினைத்து ஆட்சிக்கு வரும் ஸ்ரீலங்கா அரசு ஏமாற்றி வருகின்றது. இதற்கான பிரதான காரணம் தமிழ்கட்சிகளின் ஒற்றுமையின்மையாகும். ஒன்றுபட்டால்தான் தமிழ்மக்களுக்கு சமஸ்டி தீர்வு கிடைக்கும். இலங்கைத் தமிழர்களின் பிரச்னைகள்,அடக்குமுறைகள்,கெடுபிடிகள் அனைத்தும் இன்று ஐ.நா வரையும் ஒலித்துள்ளது.இலங்கையில் தமிழ்மக்களுக்காக தமிழ்க்கட்சிகள் ஒன்றுமைப்படவேண்டும். -என்றார். (அ)

## 32 வருடங்களின் பின் பூர்வீகக் காணிகளில் குடியேறிய அம்பாறை கனகர் கிராம மக்கள்

அம்பாறை, ஒக். 18

அம்பாறை மாவட்டத்தின் கனகர் கிராம மக்கள் சுமார் 32 வருடங்களுக்குப் பின் தங்களது பூர்வீக் காணிகளில் குடியேறியுள்ளனர்.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யுத்தத்தின் காரணமாக இடம் பெயர்ந்து மீளக்குடியேறுவதற்கு பல்வேறு எதிர்ப்புக்களைச் சந்தித்த மக்கள் தற்போது துணிச்சலாக தமது காணிகளை தாமாகவே முன்வந்து துப்பரவு செய்து வருகின்றனர்.

சர்வதேச உணவு தினத்தை முன்னிட்டு இவ் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. நேற்று முன் தினம் சர்வதேச உணவு தினமாகும். சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பின் பங்களிப்புடன் சர்வதேச உணவு தினத்தை முன்னிட்டு மேற்படி கிராமத்தில் யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களின் காணிகளில் தானியச் செய்கையை ஊக்குவிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளப்பட்டது.

தமது பூர்வீக காணிகளை துப்பரவு செய்துள்ள 25 பயனாளிகள் தானியச் செய்கைக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு பயறு,சோளன்,கச்சான் ஆகிய தானிய வகைகள் வழங்கப்பட்டன.

இதே வேளை, அந்த மக்களின் காணிகளில் அவர்களின் இருப்பை உறுதிப்ப டுத்தித் தரக்கோரி அரச திணைக்க ளங்களுக்கும் பரிந்துரை செய்யும் செயற்பாடு திட்டமிடப்பட்டது.

இருந்தபோதிலும் அரச திணைக்களங்கள் மக்கள் மீளக்குடியேறுவதற்கு எதிர்ப்பாக உள்ளமையால் மக்களாகவே முன் வந்து குடியேறியுள்ளனர்.

இந்த மக்கள் மீளக்குடியேறுவதற்கு பக்க பலமாக உள்ள சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பிற்கு நன்றியைத் தெரிவித்ததோடு தமது பூர்வீக காணிகளை இனி எந்த சந்தரப்பத்திலும் விட்டுக்கொடுக்கப் போவதில்லை என்பதையும் உறுதியாகக் கூறிக்கொண்டனர். (அ)

## சுகாதார அமைச்சின் மக்கள் முறைப்பாட்டு மையம் கல்முனை பிராந்தியத்தில் ஆரம்பம்



அம்பாறை, ஒக். 18

உலக வங்கியின் நிதி அனுசரனையில் அமுல் படுத்தப்பட்டு வரும் செயற்றிட்டத்தின் கீழ் சுகாதார அமைச்சின் கீழமைந்த மக்கள் முறைப்பாட்டு மையம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதற்கமைவாக பொது மக்கள் 1907 என்ற இலக்கத்தின் ஊடாக சுகாதார நிறுவனங்கள் தொடர் பான கோரிக்கைகள் மற்றும் முறைப்பாடு களை பதிவு செய்ய முடியும் என அறிவிக் கப்பட்டுள்ளது.

அத்தோடு கியூ.ஆர் முறை ஊடாகவும் இணைய வசதிகள் மூலமும் இம் முறைப்பாடுகளை பதிவு செய்யும் விரிவாக்கல் நடைமுறை இடம்பெறவுள்ளதாகவும் பணிப்பாளர் இந்த நிகழ்வில் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சினால் மேற்படி திட்டத்தை மேற்பார்வை செய்து அமுல்படுத்தும் குழுவில் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதி பணிப்பாளர் வைத் தியர் எம்.பீ.ஏ வாஜித் நேற்று முன் தினம் நடைபெற்ற மீளாய்வுக் கூட்டத்தில் குறை தீர்க்கும் பொறிமுறை பற்றி தெளிவுபடுத்தினார். (அ)

## அகத்தியர் வாழ்ந்த பிரதேசத்துக்கு சித்தர்கள் குரல் அமைப்பு விஜயம்

திருமலை, ஒக். 18

2000 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் மொழிக்கான “அகத்தியம்” என்ற முதல் இலக்கண நூலை எழுதியவரும் சப்த ரிசிகளில் ஒருவருமான சித்தர்களுக்கு எல்லாம் சித்தராக இருந்த அகத்தியர் இலங்கையில் வாழ்ந்த கங்குவேலி பிரதேசத்திற்கு நேற்று முன்தினம் இலங்கை சித்தர்கள் குரல் அமைப்பினர் விஜயம் செய்தனர்.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜி ஜி தலைமையிலான குழுவினர் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிளிவெட்டி கிராமத்திற்கு அருகிலுள்ள கங்கு வேலி எனும் இடத்திற்கு விஜயம் செய்தனர்.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜி , மகேஸ்வரன் சுவாமி, கனடாவில் இருந்து இதனை நேரடியாக காண வேண்டும் என வருகை தந்த பிரபல ஆன்மீக பரோபகாரி அன்பர் குமார், காரைதீவைச் சேர்ந்த ஆன்மீக ஆர்வலர்களான கே.ஜெயசிறில், வி.ரி.சகாதேவராஜா மற்றும் தமிழகரன் சனா ,சனுஸ்காந்த், பிரசானந்த் ஆகியோர் பயணத்தை மேற்கொண்டார்கள்.

அங்கு அகத்தியர் ஸ்தாபனம் என்ற அமைப்பு அகத்தியர் ஆலயம் ஒன்றை அமைத்து பல சவால்களுக்கு மத்தியில் வழிபட்டு வருகின்றார்கள்.

தாபனத்தின் தலைவர் ஓய்வுநிலை அதிபர் வேலுப்பிள்ளை தவராசா , அங்கு இருக்கின்ற அகத்தியர் வழிபட்ட சிவலிங்கம் கல்வெட்டுக்கள் மற்றும் மருத்துவ பல்கலைக்கழகம் தடயங்கள் அனைத்தையும் காண்பித்தார்.

தொடர்ந்து அங்கிருந்து ஐந்து கிலோ மீற்றர் காட்டுக்குள்ளால் சென்று அகத்தியர் ஆடி அமாவாசை தீர்த்தமாடிய மகாவலி கங்கை நதி தீரத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு சிவன் ஆலய பீடம் ஒன்று உள்ளது . அங்கு சித்தர் குரல் அமைப்பினர் முறைப்படி எண்ணெய் வைத்து மாணிக்க கங்கையில் நீராடி, மரகதலிங்கத்திற்கு அபிஷேகம் செய்தனர். (அ)

# மன்செஸ்டரில் உள்ள சீனத் தூதரக வளாகத்துக்குள் ஹொங்கொங் ஜனநாயக ஆதரவாளர்மீது தாக்குதல்!




லண்டன், ஒக். 18

மன்செஸ்டரில் உள்ள சீன தூதரக வளாகத்திற்குள் ஹொங்கொங் ஜனநாயக ஆதரவாளர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளார்.

அடையாளம் தெரியாத நபர்கள் தூதரகத்திலிருந்து வெளியே வருவதையும், ஒரு மனிதனை வளாகத்திற்குள் கட்டாயப்படுத்துவதையும் பிபிசி ஊடகவியலாளர் படம் பிடித்துள்ளார்.

பின்னர், ஹொங்கொங் ஜனநாயக ஆதரவாளர், பொலிஸ் மற்றும் பிற போராட்டக்காரர்களின் உதவியுடன் தப்பிச் சென்றார்.

தாக்கப்பட்டவர், 'என்னை உள்ளே இழுத்துச் சென்றார்கள். பின்னர் அடித்தார்கள்' என்று கூறினார்.

சீன ஜனாதிபதியின் அவமானகரமான உருவப் படத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் காட்சிப்படுத்தியதாக தூதரக செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

இந்த சம்பவம் குறித்து அவசரமாக தெளிவுபடுத்தப்பட உள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கிரேட்டர் மன்செஸ்டர் பொலிஸார் இச்சம்பவம் குறித்த விசாரணையை தொடங்கியுள்ளனர். (அ)

# உகாண்டாவில் எபோலா பரவல்: இரு மாவட்டங்களில் ஊரடங்கு!

கம்பாலா, ஒக். 18

உகாண்டாவில் எபோலா வைரஸ் பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில், இரண்டு மாவட்டங்களில் மூன்று வாரங்களுக்கு ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு உத்தரவு அமுலுக்கு வருவதால் முபெண்டே மற்றும் அதன் அண்டை மாவட்டமான கசாண்டாவில் உள்ள மதுபானக்கூடங்கள், இரவு விடுதிகள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பொழுதுபோக்கு இடங்கள் மூடப்படும்.

அனைத்து போக்குவரத்துகளும் நிறுத்தப்பட்டாலும், சரக்கு லொரிகள் மாவட்டத்திற்குள் நுழையவும், வெளியேறவும் எந்தக் கட்டுப்பாடும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.



அதேபோல, எபோலா பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்க பாரம்பரிய மருத்துவர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. முந்தைய தொற்றுப்பரவலின்போது, பாதிப்பு எண்ணிக்கை அதிகரிக்க அவர்கள் காரணமாக இருந்தனர்.

தற்போது பரவிவரும் எபோலா வைரஸின் சூடான் திரிபுக்கு எதிராக ஒப்புதல் பெற்ற தடுப்பூசிகள் ஏதும் இல்லை. 2013 முதல் 2016 வரையான காலகட்டத்தில் மேற்கு ஆபிரிக்கா முழுவதும் 11,000 பேரைக் கொன்ற சயர் திரிபிற்கு மட்டுமே தடுப்பூசி பயன்பாட்டில் உள்ளது.

ரத்தம், எச்சில் போன்ற உடல் திரவங்கள் அல்லது அசுத்தமான பொருட்களுடன் நேரடி தொடர்புகொள்வது மூலம் ஒருவருக்கு எபோலா பரவுகிறது. வாந்தி, வயிற்றுப் போக்கு, உள் அல்லது வெளிப்புற இரத்தப்போக்கு ஆகியவை அதன் அறிகுறிகளாகும்.

இது இரண்டு நாட்கள் முதல் மூன்று வாரங்கள் வரை நீடிக்கும். இந்த வைரஸ் மலேரியா மற்றும் டைஃபாய்ட் போன்ற நோய்களையும் ஏற்படுத்தலாம்.

சமீபத்திய பரவலில் தொற்று உறுதி செய்யப்பட்ட 58 பேரில், 19 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உக்ரைனின் தலைநகர்மீது ரஷ்யா மீண்டும் தாக்குதல்!

## ஆளில்லா விமானங்கள் கைவரிசை



கீவ், ஒக். 18

ரஷ்ய துருப்புகளால் நேற்று நடத்தப்பட்ட தாக்குதல்களின் போது, மத்திய ஷெவ்செங்கிவ்ஸ்கி பகுதியில் குடியிருப்புக் கட்டடங்கள் சேதமடைந்துள்ளதாக மேயர் விட்டலி கிளிட்ச்கோ தெரிவித்தார்.

'காமிகேஸ் ஆளில்லா விமானங்கள்' என்று அழைக்கப்படுபவற்றிலிருந்து தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக ஜனாதிபதி ஸெலென்ஸ்கியின் அலுவலகத்தின் தலைவர் அண்ட்ரி யெர்மக் தெரிவித்தார்.

ரெலிகிராம் சமூக ஊடகத் தளத்தில் கிளிட்ச்கோ, கடந்த வாரம் பல ஏவுகணைத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட மத்திய ஷெவ்செங்கிவ்ஸ்கி பகுதியில் மீட்புப் படையினர் இருப்பதாகவும், குடியிருப்பாளர்களை வான்வழித் தாக்குதல் முகாம்களில் தங்குமாறும் கூறினார்.

உக்ரைன் தலைநகர் கீவ்வில் வான்வழித் தாக்குதல் சைரன்கள் ஒலித்ததைத் தொடர்ந்து குறைந்தது மூன்று வெடிப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று திங்கள்கிழமை காலை உள்ளூர் நேரப்படி சுமார் 07:00 மணிக்கு வெடிப்புகள் நடந்ததாக நகர அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அவற்றில் ஒன்று நகர மையத்திற்கு அருகில் வெடித்தது.

எனினும், இந்த தாக்குதல்களின் போது ஏற்பட்ட உயிரிழப்பு மற்றும் சேதங்கள் குறித்த தகவல்கள் தெளிவாக இல்லை.

கடந்த வாரம் தலைநகரில் நடத்தப்பட்ட ஏவுகணை தாக்குதல்களின் போது, 19 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், கடந்த வாரம் ரஷ்யாவை ஆக்கிரமித்துள்ள கிரிமியாவுடன் இணைக்கும் முக்கிய பாலம் மீது குண்டு வீசி தாக்கியதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக கூறினார். போரின்போது தலைநகர் கிவ்வின் மையம் நேரடியாக குறி வைக்கப்பட்டது இதுவே முதல் முறை ஆகும்.

இந்த வார தொடக்கத்தில், உக்ரைன் மீது இன்னும் பெரிய அளவிலான தாக்குதல்கள் நடத்தும் திட்டம் இல்லை எனவும், நாட்டை அழிப்பது தனது நோக்கம் அல்ல என்றும் புடின் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# ஈரானின் எவின் சிறையில் தீ விபத்து: 4 கைதிகள் உயிரிழப்பு! 61பேர் காயம்!!



தெஹ்ரான், ஒக். 18

ஈரானின் வடக்கு தெஹ்ரானில் உள்ள எவின் சிறைச்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் குறைந்தது நான்கு கைதிகள் உயிரிழந்தனர் மற்றும் 61பேர் காயமடைந்தனர்.

ஆனால், உயிரிழப்பு எண்ணிக்கை இதைவிட அதிகம் என நம்பப்படுகின்றது.

சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட காணொளிகளில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதாகவும், சிறைச்சாலை அமைந்துள்ளதாக நம்பப்படும் பகுதிக்கு ஈரானிய சிறப்புப் படைகள் செல்வதைக் கண்டதாகவும் 1500 தஸ்விர் என்ற ஆர்வலர் குழு தெரிவித்துள்ளது.

ஈரான் முழுவதும் பல வாரங்களாக அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை தொடர்ந்து தீ விபத்து ஏற்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கானோர் ஈவின் சிறைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். சிறைச்சாலையின் நிலைமைக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும் தொடர்பு உள்ளதா என்பது தெரியவில்லை.

சிறைச்சாலைக்குள் இருந்து பேசிய தெஹ்ரானின் ஆளுனர் அரசுத் தொலைக்காட்சிக்கு அளித்த செவ்வியில், சிறைச்சாலையில் சிறு குற்றவாளிகள் இருக்கும் பிரிவில் கலவரம் நடந்ததாகவும், தற்போது நிலைமை முற்றிலும் அமைதியாக இருப்பதாகவும் கூறினார்.

ஆனால், சிறையில் இருக்கும் உயர் அரசியல் கைதிகளை முன்கூட்டியே விடுதலை செய்துவிட்டு அதிகாரிகள் வேண்டுமென்றே சிறைக்குத் தீ வைத்ததாக சில ஊடகவியலாளர்கள் சமூக வலைத்தளங்களில் குற்றம்சாட்டியுள்ளனர்.

ஈரானின் மறைந்த முன்னாள் ஜனாதிபதி அக்பர் ஹஷேமி ரப்சஞ்சனியின் மகன் மெஹ்தி ஹஷேமி ரப்சஞ்சனிக்கு முன்கூட்டியே தற்காலிக விடுதலை வழங்கப்பட்டதாக அவரது சகோதரர் தெரிவித்துள்ளார்.

ஈரானின் புரட்சிகர காவலர்களுடன் தொடர்புடைய ஃபார்ஸ் செய்தி நிறுவனம் சிறைக்கலவரத்திற்குப் பிறகு கண்ணிவெடிகள் வெடித்ததால் வெடிப்புகள் ஏற்பட்டதாகக் கூறியுள்ளது.

முதலில், தீ விபத்திற்கு மத்தியில் தப்பிக்க முயற்சித்த சில கைதிகள் சிறையின் வடக்குப்பகுதியில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்த இடத்தில் சிக்கிக்கொண்டதாக அந்த நிறுவனம் செய்தி வெளியிட்ட நிலையில், பின்னர் தங்களுக்கு கிடைக்கும் தகவலின்படி யாரும் அந்தப் பகுதிக்குச் செல்லவில்லை என்று தெரிவித்தது.

கடந்த மாதம் மாசா அமினி என்ற குர்திஷ் இனப் பெண் பொலிஸ் காவலில் உயிரிழந்ததைத் தொடர்ந்து, இந்தப் போராட்டம் வெடித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



## உலக கிண்ணத்திலிருந்து மதுஷங்க விலகினார்!

மெல்பர்ன், ஒக். 18

இருபது -20 உலகக் கிண்ணத் தொடரிலிருந்து காயம் காரணமாக இலங்கை அணியின் டில்ஷான் மதுஷங்க விலகியுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் உலகக் கிண்ண முதல் சுற்றுப் போட்டி நடக்கிறது. இந்த நிலையில், காயம் காரணமாக மதுஷங்க தொடரிலிருந்து விலகியுள்ளார். அவருக்கு பதிலாக இடது கை வேகப்பந்து வீச்சாளர் பினுர பெர்னாண்டோ அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதுவரை 9 இருபது -20 போட்டிகளில் விளையாடியுள்ள பினுர பெர்னாண்டோ, இந்தாண்டு பெப்ரவரி மாதம் இந்திய அணிக்கு எதிராக நடைபெற்ற இருபது -20 தொடரில் பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## லா லிகா உதைபந்தாட்டம் ரியல் மட்ரிட் இலகு வெற்றி!

மட்ரிட், ஒக். 18

பென்சிமா அடித்த அபாரமான கோலுடன் பார்சிலோனா அணியை 3 - 1 என்ற கோல் கணக்கில் இலகுவாக வெற்றி பெற்றது ரியல் மட்ரிட் அணி.

2022- 2023 ஆண்டுக்கான லா லிகா உதைபந்தாட்டப் போட்டி ஸ்பெயினில் நடந்து வருகிறது.

20 அணிகள் பங்கேற்றுள்ள இந்த தொடரில் நேற்று நடந்த மிக முக்கிமான போட்டியில் பார்சிலோனா அணியும், ரியல் மட்ரிட் அணியும் மோதின.

ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் வீரர் கரீம் பென்சிமா முதல் கோலை அடித்தார். அவரை தொடர்ந்து அந்த அணியின் பெடெரிகோ 2ஆவது கோலை அடிக்க (35ஆவது நிமிடத்தில்) முதல் பாதியில் ரியல் மட்ரிட் அணி 2 கோல்கள் முன்னிலை பெற்று இருந்தது.

பரபரப்பாக நடைபெற்ற 2ஆவது பாதியில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடிக்க ரியல் மட்ரிட் அணி 3-1 என்ற கணக்கில் பார்சிலோனா அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது. (ஐ)

### இருபது - 20 உலகக் கிண்ணம்:

# மேற்கிந்தியத் தீவுகள் அணி ஸ்கொட்லாந்திடம் தோல்வி!




ஹோபார்ட், ஒக். 18

மேற்கிந்தியத் தீவுகளை 42 ஓட்டங்களால் முற்றிலும் எதிர்பாராத விதமாக ஸ்கொட்லாந்து வெற்றி கொண்டது.

இருபது - 20 உலகக் கிண்ண முதல் சுற்று (தகுதிகாண்) பி பிரிவு போட்டி நேற்று ஹோபார்ட்டில் நடந்தது. இதில், மேற்கிந்தியத் தீவுகள், ஸ்கொட்லாந்து அணிகள் மோதின.

ஸ்கொட்லாந்தின் ஆரம்ப வீரர் ஜோர்ஜ் முன்சேயின் அரைச் சதம், மார்க் வொட், மைக்கல் லீஸ்க் ஆகியோரின் மிகத் திறமையான பந்துவீச்சு என்பன மேற்கிந்தியத் தீவுகளை மண்டியிட வைத்தன.

இந்தப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை விட ஸ்கொட்லாந்து அணி சகலதுறைகளிலும் அபரிமிதமாக பிரகாசித்தது.

ஸ்கொட்லாந்து நிர்ணயித்த 161 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் 18.3 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 118 ஓட்டங்களை மட்டும் பெற்று அதிர்ச்சி தோல்வி அடைந்தது.

எட்டாவது ஓவரில் 2 விக்கெட்களை மாத்திரம் இழந்து 58 ஓட்டங்களைப் பெற்று ஓரளவு பலமான நிலையில் இருந்த மேற்கிந்தியத் தீவுகள் கடைசி 8 விக்கெட்களை 60 ஓட்டங்களுக்கு இழந்தது.

மேற்கிந்தியத் தீவுகளின் துடுப்பாட்டத்தில் நால்வர் மாத்திரமே இரு இலக்க ஓட்டங்களைப் பெற்றனர். இவர்களில் மத்திய வரிசை வீரரும் முன்னாள் அணித் தலைவருமான ஜசன் ஹோல்டர் அதிகபட்சமாக 38 ஓட்டங்களைப் பெற்றார். இவரைவிட கைல் மேயர்ஸ் (20), பிரெண்டன் கிங் (17), எவின் லூயிஸ் (14) ஆகியோரே அடுத்து பெரிய ஓட்டங்களை பெற்றனர்.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அணித் தலைவர் நிக்கலஸ் பூரண், ஷம்ரா புறூக்ஸ், ரோவ்மன் பவல் ஆகிய பிரதான வீரர்கள் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கத் தவறி ஒற்றை இலக்க எண்ணிக்கைகளுடன் ஆட்டமிழந்தது அணிக்கு பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது.

ஸ்கொட்லாந்து சார்பில் மிகவும் துல்லியமாக பந்துவீசிய மார்க் வொட் 12 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் மைக்கல் லீஸ்க் 15 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் பிரெட் வீல் 32 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 160 ஓட்டங்களைக் குவித்தது.

சரியான திட்டமிடல், புத்தி சாதுரியம் ஆகியவற்றுடன் ஸ்கொட்லாந்து ஓட்டங்களைப் பெற்றது. ஸ்கொட்லாந்து சார்பாக துடுப்பெடுத்தாடிய 7 பேரில் இருவரைத் தவிர மற்றைய ஐவரும் 15 ஓட்டங்களுக்கு மேல் பெற்றதுடன் ஜோர்ஜ் முன்சேயின் துடுப்பாட்டம் எடுத்துக்காட்டாக அமைந்தது.

நிதானம் கலந்த வேகத்துடன் மிகவும் சாதுரியமாக துடுப்பெடுத்தாடிய ஜோர்ஜ் முன்சே ஆட்டமிழக்காமல் 66 ஓட்டங்களைப் பெற்றார். அத்துடன், கெலம் மெக்லி யொட் 23 ஓட்டங்களையும் மைக்கல் ஜோன்ஸ் 20 ஓட்டங்க ளையும் கிறிஸ் க்றீவ்ஸ் ஆட்ட மிழக்காமல் 16 ஓட்டங்களையும் அணித் தலைவர் ரிச்சி பெறிங்டன் 16 ஓட்டங்களையும் பெற்றனர். மேற்கிந்தியத் தீவுகள் பந்துவீச் சில் ஜசன் ஹோல்டர் 14 ஓட்டங் களுக்கு 2 விக்கெட்களையும் அல்ஸாரி ஜோசப் 28 ஓட்டங்க ளுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். (ஐ)

## ஐ. பி. எல். தொடருக்கான வீரர்கள் ஏலம் டிசெம்பரில்!

புதுடில்லி, ஒக். 18

2023ஆம் ஆண்டு ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டியில் வீரர்கள் பங்கேற்பதற்கான ஏலத்தை டிசெம்பர் 16ஆம் திகதி நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

கொரோனா காரணமாக 2020, 2021-ம் ஆண்டுகளில் ஐக்கிய அரபு அமீரகத்தில் ஐ. பி. எல். போட்டி நடத்தப்பட்டது.




2022ஆம்ஆண்டில் ஐ. பி. எல். தொடர் மகாராஷ்டிர மாநிலம் மும்பை, புனே நகரங்களில் நடத்தப்பட்டன.

இந்நிலையில், 2023ஆம்ஆண்டில் உள்ளூர் மைதானங்களில் ஐ. பி. எல். போட்டிகள் நடத்தப்படும் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை அறிவித்துள்ளது. இதையடுத்து வரும் டிசெம்பர் 16ஆம் திகதி ஐ. பி. எல். வீரர்கள் ஏலத்தை நடத்த இந்திய கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

# நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதத்தில் சரிவு

## வறுமை நிலை இரட்டிப்பாகிறது

**கொழும்பு, ஒக். 18**

**தற்போது கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் 2022 இல் 9.2 சதவீதத்திலும் 2023இல் மேலும் 4.2 சதவீதத்திலும் வீழ்ச்சியடையும் என உலக வங்கியின் சமீபத்திய அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.**

கொவிட் தொற்றுநோய் மற்றும் ரஷ்ய-உக்ரைன் யுத்தம் காரணமாக பொருட்களின் விலைகள் அதிகரிப்பு இலங்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக அறிக்கை காட்டுகிறது. பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் போது, 2021 மற்றும் 2022 க்கு இடையில் வறுமை 25.6 வீதமாக இரட்டிப்பாகியுள்ளது. வறுமையில் வாடும் மக்களின் எண்ணிக்கை 27 இலட்சம் அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாலைதீவுகள், நேபாளம் மற்றும் இலங்கைக்கான உலக வங்கியின் பணிப்பாளர்பரிஸ் எச்.ஹடாத் சர்வோஸ், சமூகப் பாதுகாப்பு அமைப்பை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தும் அதே வேளையில், ஏழைகள் மற்றும் மிகவும் தேவைப்படும் மக்களைப் பாதுகாக்க அவசர நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று கூறுகிறார்.

இதேவேளை, நாட்டில் நிலவும் வறுமை தொடர்பில் பேராதனை அறிஞர்கள் குழுவினால் இந்த வாரம் வெளியிடப்பட்ட கணக்கெடுப்பு அறிக்கையின்படி, நாட்டில் வறுமையில் வாடும் குடும்பங்களின் எண்ணிக்கை 24 இலட்சமாக அதிகரித்துள்ளதாக தெரியவந்துள்ளது. 2019ல் இந்த எண்ணிக்கை 7 லட்சம் குடும்பங்களாக இருந்தது.

2019 ஆம் ஆண்டில், வறுமையில் வாடும் மக்களின் எண்ணிக்கை சுமார் 30 லட்சமாக இருந்தது, 2022 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 96 லட்சமாக அதிகரித்துள்ளது, அதன்படி நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 42 வீதம் பேர் வறுமையில் உள்ளனர். (அ)



# மன்னாரில் சுயதொழில் ஊக்குவிப்புச் சந்தை!

மன்னார், ஒக். 18

மன்னாரில் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் வகையில் மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் வழிநடத்தலின் கீழ் பிரதேச செயலக முன் வளாகத்தில் உள்ளூர் உற்பத்திகளுக்கான விற்பனைச் சந்தையானது நேற்று திங்கட்கிழமை காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த உள்ளூர் உற்பத்தி சந்தையை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்டான்லி டிமெல் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

குறித்த சுய தொழில் ஊக்குவிப்பு சந்தையில் மன்னாரில் உள்ள உள்ளூர் உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# பார்வையற்றோர் பிரச்னைகளை தீர்ப்பதற்கு ஜனாதிபதி அலுவலகம் முழுமையான ஆதரவு

கொழும்பு, ஒக். 18

பார்வையற்றோர் எதிர்நோக்கும் பிரச்னைகளை தீர்க்க ஜனாதிபதி அலுவலகம் முழுமையான ஆதரவை வழங்கும் என்று ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து கொடி அணிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி அலுவலக செலவில் பார்வையற்றோருக்கு 300 வெள்ளை பிரம்புகளை கையளிக்கும் நிகழ்வு ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் உரையாற்றிய ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பார்வையற்றோர் எதிர்நோக்கும் பிரச்னைகளை தீர்க்க முழுமையான ஆதரவை வழங்குவதாக தெரிவித்தார்.



இந்நிகழ்வில் உரையாற்றிய பார்வையற்றோர் தேசிய சங்கத்தின் செயலாளர் பிரசன்ன விக்ரமசிங்க, இந்த சங்கம் அனைத்து மாகாணத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இதேவேளை பெண்களுக்கான மாற்றுத்திறனாளிகள் சங்கத்தின் ஒரு கிளையாக பார்வையற்ற பெண்களின் சங்கமும், மாற்றுத்திறனையுடைய இளைஞர்களின் பிரச்னைகளை தீர்க்க இளைஞர் சங்கமும் இயங்கி வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் இலங்கை தேசிய பார்வையற்றோர் சங்கத்தின் தலைவர் கமல்சிறி நாணயக்கார மற்றும் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் குழுவினர் கலந்துகொண்டனர். (அ)

# ஆடம்பரமான கிறிஸ்மஸ் கொண்டாட்டம் வேண்டாம்

## கொழும்பு பேராயர் கோரிக்கை

கொழும்பு, ஒக். 18

அலங்காரங்களை தடை செய்தல் உள்ளிட்ட ஆடம்பரமான கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களை விரிவுபடுத்துவதை நிறுத்துமாறு கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அழைப்பு விடுத்துள்ளார்.

நீர்கொழும்பு - படபத்தல புனித தெரேசா தேவாலயத்தில் நடைபெற்ற ஆராதனையில் கலந்துகொண்டு உரையாற்றிய பேராயர், இந்த வருட கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களை பசியைப் போக்குவதற்காக மட்டுப்படுத்த வேண்டும் என தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் நிலைமையைக் கருத்திற்கொண்டு இந்த கிறிஸ்மஸில் தேவாலயங்கள் மற்றும் பிற இடங்களை அலங்கரிப்பதற்காக ஒருவர் பணத்தை வீணாக்கக்கூடாது.

பசியில் வாடுபவர்கள் ஏராளமானோர் உள்ளனர். எனவே, இந்த ஆண்டு கிறிஸ்மஸ் சமயத்தில் ஏழைகளுக்கு



உணவு வழங்குவது மட்டுமே செய்ய வேண்டும்.

இதேநேரம், ஈஸ்டரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்போதைய ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திடமிருந்து நீதியை எதிர்பார்க்க முடியாது.

தற்போதைய ஜனாதிபதி, பின் வாசலால் வந்தவர் என்பதால், அவர் இப்போது வகிக்கும் பதவியை வகிக்க மக்களின் சம்மதம் இல்லை.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழு, தாக்குதலின் பின்னணியில் அரசியல் கை இருக்கலாம் என தெரிவித்துள்ளது-என்றார். (அ)

# றோயல் கல்லூரி அதிபருக்கு எதிராக போர்க்கொடி தூக்கும் ஆசிரியர்கள்!

கொழும்பு, ஒக். 18

கொழும்பு றோயல் கல்லூரியின் அதிபர் சனத் ஜயலத்தினால் ஆசிரியர் ஒருவர் கண்டிக்கப்பட்ட சம்பவம் தற்போது பாரிய பிரச்னையாக மாறியுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட கல்வி அமைச்சின் அதிகாரிகள் அதிபரை நீக்க வேண்டும் என்பதில் ஆசிரியர்கள் கடும் அபிப்பிராயத்தில் இருப்பதாகக் கண்டறிந்துள்ளனர்.

அதிகாரிகள் 12 ஆசிரியர்களின் கருத்துகளைக் கேட்டதுடன், அனைத்து ஆசிரியர்களும் அதிபருக்கு எதிரானவர்களாக உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆசிரியர் தினத்தன்று ஆசிரியையை அதிபர் கண்டித்துள்ளார். இச்சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, ஆசிரியர்கள் மறுநாள் கற்பித்தலை விட்டு வெளியேறியுள்ளனர். இதையடுத்து கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் வந்து சம்பவம் குறித்து விசாரணை நடத்தினார். அடுத்த நாள் சம்பவத்தை விசாரிக்க மேலும் இரண்டு அதிகாரிகள் பாடசாலைக்கு சென்றனர். இதன்போது அதிபருக்கு எதிராக ஆசிரியர்கள் நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளனர்.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்கவும் தீர்மானித்துள்ளார்.

எவ்வாறாயினும், ரஷ்யாவுக்கு விஜயம் செய்துள்ள கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த வருகை தந்ததன் பின்னர் இந்த வாரம் குறித்த விடயம் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அமைச்சுத் தகவல்கள் தெரிவித்தன. (அ)

## பெற்றோல்...

ஓட்டோ டீசல் ஒரு லீற்றர் 415 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், சுப்பர் பெற்றோல், சுப்பர் டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலையில் எந்த மாற்றமும் இல்லை என்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. (ஐ)

## தமிழர்களின்...

மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் தன்னை சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சி. சிறீதரன் எம். பியிடம் உறுதியளித்தார்.

தமிழகம் சென்றுள்ள சிறீதரன் எம். பி. மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல் ஹாசனை ஆழ்வார் பேட்டையிலுள்ள கட்சியின் மாநில தலைமையகத்தில் நேற்று சந் தித்து உரையாடினார். இதன் போதே கமல் ஹாசன் மேற்கண்டவாறு உறுதியளிளத்தார்.

இந்த சந்திப்பின்போது, "போர், பொருளாதார நெருக்கடி, அரசியல் சூழல் காரணமாக இலங்கைவாழ் தமிழர்கள் மிகுந்த இன்னலுக்குள்ளாகி நிற்கின்றனர். மாகாணங்களுக்கு உரிய அரசியல் அதிகாரம் (தன்னாட்சி உரிமை) பெறுவதற்கும், தமிழர்களின் தனித்துவமான மொழி அடிப்படையில் தீர்வு அமைய வேண்டும் என்பதற்காகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து போராடி வருகின்றது. தமிழர்களின் பூர்வீக இடங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்படுவது பற்றிக் கவலை தெரிவித்த அவர், மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல் ஹாசன் இலங்கைக்கு வருகை தரவேண்டும் என்று அழைப்பும் விடுத்தார்.

"இலங்கைத் தமிழர்களின் உரிமைகளுக்கு அறவழியில் மக்கள் நீதி மய்யம் தொடர்ந்து குரல் கொடுக்கும்" என்று இதன்போது கமல் ஹாசன் உறுதியளித்தார். (ஐ)

## இந்திய...

ஆதார் அட்டை பெற்றுள்ளேன். எனக்கு இந்திய குடியுரிமை கேட்டு திருச்சி ஆட்சியரிடம் மனு அளித்தேன். அவர் எனது விண்ணப்பத்தை மத்திய அரசுக்கு அனுப்பாமல் உள்ளார். என் விண்ணப்பத்தை மத்திய அரசுக்கு அனுப்ப ஆட்சியருக்கு உத்தரவிட வேண்டும்" என்று அந்த மனுவில் கேட்டிருந்தார்.

இந்த மனுவை விசாரித்து நீதிபதி ஜி. ஆர். சுவாமிநாதன் பிறப்பித்த தீர்ப்பில் "மனுதாரரின் பெற்றோர் இலங்கையை சேர்ந்தவர்கள். மனுதாரர் இந்தியாவில் பிறந்துள்ளார். அவர் இலங்கை குடிமகளாக இல்லை. மனுதாரரின் இந்திய குடியுரிமை கோரிக்கையை நிராகரிப்பது சரியல்ல. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் நாடுகளில் துன்புறுத்தப்படும் சிறுபான்மையினருக்கு குடியுரிமை வழங்குவதற்கான குடியுரிமை சட்டத் திருத்தத்தை மத்திய அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது.

அந்தச் சட்டத்தில் இலங்கையை சேர்ந்தவர்கள் சேர்க்கப்படவில்லை. இலங்கை இனப்பிரச்னையில் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் இந்து தமிழர்கள் தான். இதனால், குடியுரிமை திருத்தச் சட்டப்படி இலங்கையை சேர்ந்தவர்களும் இந்திய குடியுரிமை பெற தகுதியானவர்களே. இதனால் மனுதாரர் குடியுரிமை கோரி அனுப்பிய விண்ணப் பத்தை திருச்சி மாவட்ட ஆட்சியர் மத்திய உள்ளதுறை செயலாளருக்கு அனுப்ப வேண்டும். மத்திய உள்துறை செயலாளர் மனுதாரரின் கோரிக்கை குறித்து 16 வாரங்களில் சட்டத்துக்கு உட்பட்டு பரிசீலனை செய்து உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும்" என்று கூறியுள்ளார். (ஐ)

## 13ஆம் திருத்தத்துக்கு....

மேலும், இந்தியாவுக்கு ஏற்படும் எந்தவொரு பாதுகாப்பு அச்சுறுத்தலும் இலங்கைக்குமான பாதுகாப்பு அச்சுறுத்தல். இந்தியாவின் நலன்களுக்கு பாதகமாக எந்த ஒரு வெளிநாடும் இலங்கையின் துறைமுகங்களை பயன்படுத்த அனுமதிக்காது என்றும் அவர் கூறியுள் ளார்.

'ரைம்ஸ் ஒவ் இந்தியா'வுக்கு மிலிந்த மொறகொட அளித்துள்ள நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், கடன் நெருக்கடியால் சிக்கியுள்ள இலங்கையின் நிலையான பொருளா தார மீட்சிக்கான திறவுகோல் இந்தி யாவே. மூலோபாய ரீதியாக ஜப்பான், இஸ்ரேல், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகள் மற்றும் இந்தியாவுடன் முத் தரப்பு ஒத்துழைப்பு வாய்ப்புகளை இலங்கை ஆராய்ந்து வருகிறது. இலங்கை இந்தியாவுடன் பொருளாதார ஒருங்கிணைப்பையே விரும்புகிறது. இது கடன் நெருக்கடியிலிருந்து விரை வாக மீள்வதை உறுதி செய்யும்.

இதேநேரத்தில், அண்மையில் சீன இராணுவத்துக்கு சொந்தமான தொழில்நுட்ப கப்பலை இலங்கை அனுமதித்தது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், "இது போன்ற பிரச்னைகளுக்கு இரு நாடுகளும் தீர்வு காண அனுமதிக்கும் பொறிமுறையை இறுதி செய்ய இந்தியாவுடன் இலங்கை பேச்சு நடத்துகிறது. இந்தியாவுடனான பொருளாதார ஒருங்கிணைப்பு நடந்தவுடன் புவிசார் அரசியல் பிரச்னைகள் தாமாகவே தீர்க்கப்படும். அதுவரை நாம் நிச்சயமாக பேச வேண்டும். நாம் அபாய எல்லைகளை தாண்டவில்லை. பாதுகாப்பு தொடர்பில் எமது அடிப்படை கொள்கை என்னவென்றால், இந்தியாவுக்கு ஏற்படும் எந்தவொரு பாதுகாப்பு அச்சுறுத்தலும் இலங்கைக்குமான பாதுகாப்பு அச்சுறுத்தலே. இந்தியாவும் இதையே நினைக்கும் என்று நம்புகிறோம்.", என்றார்.

13ஆவது அரசமைப்பு திருத்தத்தின் கீழ் தமிழர் பிரச்னையில் இலங்கை தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற போதுமான பங்களிப்பை செய்யவில்லை என்று மனித உரிமைகள் பேரவையில் இந்தியா கூறியமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த மிலிந்த மொறகொட,

"இந்திய அரசாங்கம் கூறியதில் புதிதாக எதுவுமும் இல்லை. ' நுணுக்கம் மாறியிருக்கலாம்' ஆனால், அரசியல் ரீதியாக இலங்கை நிலைமாறும் கட்டத்தில் இருக்கிறது. சமூக, அரசியல் ரீதியான ஒப்பந்தங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. இலங்கை ஒரு சிக்கலான நாடு. பல மதங்கள், இனங்களுடன் இந்தப் பிரச்னையும் (13ஆம் திருத்த சட்டம்) அதே வகையின் கீழ் வருகிறது. நாம் ஒரு புதிய ஒப்பந்தத்தை உருவாக்க வேண்டும்.", என்று கூறியுள்ளார். (ஐ)

## மன்னிப்பு...

நிதியை மீளளிக்கு மாறு உள்ளூராட்சி ஆணையாளரால் தமக்கு அறிவுறுத்தப்பட்டதாகவும் முதல்வர் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, இந்த விடயம் வெளிநாடுகளுக்கு இடையிலான இராஜதந்திர நடைமுறைகளை பாதிக்கும். எனவே, இதை தொடர்ந்தும் பேசுபொருளாக வைத்து சபையில் விவாதிக்காமல் முடிவுக்கு கொண்டு வருவது சிறந்தது என்று ஈ. பி. டி. பி. கட்சியின் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கூறியதுடன், நிதி மீளளிக்கும் தீர்மானத்தை சபையில் நிறைவேற்று மாறும் கோரினார்.

இதைத் தொடர்ந்து ஜப்பான் அரசாங்கம் வழங்கிய நிதியை மீளளக்க சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி (கஜேந்திரகுமார் அணி) ஆகியோர் இந்தக் கூட்டத்தைப் புறக்கணித்திருந்தனர்.

முன்னதாக, ஜப்பான் அரசாங்கம் வழங்கிய நிதியை மீளளிப்பதாக சபைக்கு தெரியாமல் முதல்வர் மணிவண்ணன் கடிதம் அனுப்பியிருந்தார். இந்த விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், ஈ. பி. டி. பி. கட்சியிடம் சமரசம் செய்ய முயன்றார். அவர் மன்னிப்புக் கேட்டால் அதற்கு இணங்குவதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து சபையில் முதல்வர் மணிவண்ணன் மன்னிப்பு கேட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

## பஸ்கட்டணம்...

பெரும் வேறுபாடு காணப்படுகிறது என அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார்.

எரிபொருள் விலை குறைப்பை தொடர்ந்து பஸ் கட்டணம் குறைப்பு தொடர்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், டீசலின் விலையை 15 ரூபாயால் குறைத்துள்ளதால் தனியார் பஸ் உரிமையாளர்கள் பெருமளவில் இலாபமடைய போவதில்லை. பஸ் கட்டணத்தை குறைக்க வேண்டுமாயின் ஒரு லீற்றர் டீசலின் விலை நூற்றுக்கு 4 சதவீதத்திலாவது குறைக்கப்பட வேண்டும். ஆகவே தற்போதைய நிலையில் பேருந்து கட்டணத்தின் விலையை குறைக்க முடியாது - என்றார். (ஐ)

## 22ஆவது...

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், தற்போதுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களே கையுயர்த்தி பாராளுமன்றத்தை கலைப்பதற்கான காலத்தை நான்கரை வருடங்களாக மாற்றினர். ஆகையால் நாங்கள் அந்த பரிந்துரையில் எவ்வித மாற்றங்களையும் செயல்படுத்த முயற்சிக்கவில்லை.

19ஆவது திருத்தத்திலேயே பாராளுமன்றத்தை கலைப்பதற்கான காலம் நான்கரை வருடத்திலிருந்து இரண்டரை வருடமாக குறைக்கப்பட்டது. 20ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தில் தற்போதுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்களே அதனை நான்கரை வருடங்களாக்கியுள்ளனர். பாராளுமன்றத்தை நான்கரை வருடத்தில் கலைப்பதற்கு அனைத்து எதிர்க்கட்சிகளும் இணங்கியுள்ளன.

இரட்டை குடியுரிமை தொடர்பில் சட்ட ரீதியான தீர்வுகள் காணப்படுகின்றமையால் அதனை நீக்குவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க வில்லை. 22ஆவது உத்தேச அரசியல் அமைப்பு திருத்தம் மக்களுக்கே அதிக தேவையாக காணப்படுவதால் இதனை நாங்கள் நிறைவேற்ற எதிர்பார்க்கின்றோம்.

19ஆவது அரசமைப்பு திருத்தத்தின் உண்மைத்தன்மையை எடுத்துணர்த்திய போதே அதற்கு அதிகமானோர் வாக்களித்தனர். அதனைப் போன்றே இதற்கும் 150 பேர் வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கை காணப்படுகின்றது - என்றார். (ஐ)

## ஹெரோயின்...

கைதானவர்களில் இருவருக்கு ஏற்கனவே நீதிமன்றத்தால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

கைதானவர்கள் எழுதுமட்டுவாள் பகுதியில் போதைப் பொருளை பெற்றனர் என்றும், பளைப் பகுதியை சேர்ந்த ஒருவரே அவர்களுக்கு போதைப் பொருளை விற்றார் என்றும் விசாரணையில் தெரிவித்துளளனர்.

கைதானவர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (ஐ-03)

## சர்வதேச...

எமக்கு வேண்டாம். சர்வதேச விசாரணையே தேவை", என்று அவர்கள் வலியுறுத்தினர்.

ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்ட யாழ். மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத் தலைவி சிவபாதம் இளங்கோதை, "13 வருடங்களாக நாம் வீதிகளில் அலைந்து திரிகின்றோம். எங்களுக்காக குரல் கொடுக்க நாட்டில் யாரும் இல்லை. அதனால்தான் நாம் சர்வதேசத்தை நாடுகின்றோம். ஆனாலும், இப்போது சர்வதேசமும் எமக்கு கண் துடைப்பாகவே காணப்படுகிறது - என்றார். (ஐ)

## இலங்கையின்...

அதிகரிக்க வேண்டும் என்று அந்த அமைப்பு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் வடக்கு பகுதியில் சீன இராணுவத்தினரின் நடமாட்டம், செய்மதிகள், ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏனைய உயர்தொழில்நுட்ப சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதனால், தமிழ்நாட்டின் கரையோர பகுதிகளில் கடுமையான கண்காணிப்பு நட வடிக்கைகள் அவசியம். தமிழ்நாட்டின் அனைத்து நகரங்கள், மாவட்டங்களுக் கும் இந்த எச்சரிக்கை அனுப்பப்பட்டுள் ளது என்றும் தமிழ்நாடு புலனாய்வு பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையின் அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினர்களின் உதவியுடன் சீன இராணுவத்தை சேர்ந்த சிலர் இரகசியமாக இந்தியாவுக்குள் நுழைந்துள்ளனர் என்று சில நாட்களுக்கு முன்னர் எச்சரிக்கை வெளியாகியிருந்தது. இந்நிலையில், இத்தகைய ஊடுருவல்கள் வேறு சக்திகளாலும் நிகழ்த்தப்படலாம் என்றும் தமிழக புலனாய்வு பிரிவு எச்சரித்துள்ளது.

யாழ்ப்பாணத்தின் அனலைதீவு, மீசாலை, சாவகச்சேரி பிரதேசங்களிலும், முல்லைத்தீவு உள்ளிட்ட வடக்கின் பல பகுதிகளிலும் சீன பிரஜைகளின் நடமாட்டம் உள்ளது. அவர்களின் நடமாட்டம் தமிழ் மீனவர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

தங்கள் ஒரேயொரு வாழ்வாதாரத்துக்கான வழியாகக் காணப்படுகின்ற கடல்வளத்தை சீனர்கள் பயன்படுத்துகின்றனர் என்று அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். தற்போதைய நிலை இலங்கை மக்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்தலாம். வடக்கு, கிழக்கு பகுதிகளில் இந்தியாவின் செல்வாக்குக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம் என்று தமிழ் மக்கள் அஞ்சுகின்றனர் என்றும் புலனாய்வு பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையில், சீனர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது சர்ச்சைக்குரிய உண்மை என்று தமிழக கடலோர பாதுகாப்பு குழுவின் கூடுதல் பொலிஸ் இயக்குநரகம் தெரிவித்துள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# புனர்வாழ்வு மையங்களில் மக்களை தடுத்து வைக்க அதிகாரம் வழங்கும் சட்டமூலத்தை அகற்றவேண்டும்

*மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து*

**கொழும்பு, ஒக். 18**

**இராணுவத்தால் நடத்தப்படும் 'புனர்வாழ்வு' மையங்களில் மக்களை தடுத்து வைப்பதற்கு அதிகாரிகளுக்கு பரந்தளவிலான அதிகாரங்களை வழங்கும் சட்டமூல வரைவை இலங்கை அரசாங்கம் மீளப் பெற வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.**

அது நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், தடுத்து வைக்கப்படுபவர்கள் துஷ்பிரயோகத்துக்கு ஆளாக நேரிடும் என தெரிவித்துள்ளது.

கடந்த செப்ரெம்பர் 23ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட புனர்வாழ்வு பணியக சட்டமூல வரைவு, குறித்த புனர்வாழ்வு மையங்களில் போதைக்கு அடிமையானவர்கள், முன்னாள் போராளிகள், வன்முறை, தீவிரவாதக் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் வேறு ஏதேனும் குழுவைச் சேர்ந்தவர்கள் வலுக் கட்டாயமாக காவலில் வைக்க அனுமதிக்கும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிடுகிறது.

புனர்வாழ்வுப் பணியக சட்டமூலமானது, 'புனர்வாழ்வு' மையங்கள் இராணுவத்தினரை பணியாளர்களாக கொண்ட பாதுகாப்பு அமைச்சகத்தால் கட்டுப்படுத்தப்படும் புதிய நிர்வாகக் கட்டமைப்பை நிறுவும்.




ஏற்கனவே, முன்மொழியப்பட்டுள்ள இந்த சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி மனித உரிமைகள் சட்டத்தரணிகள் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர் என்றும் இந்த சட்டமூலமானது, புனர்வாழ்வுக்காக அனுப்பப்படுவதற்கான காரணத்தை குறிப்பிடவில்லை என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எனினும் எந்தவொரு குற்றத்திலும் தண்டனை பெறாதவர்களை வலுக்கட்டாயமாக 'புனர்வாழ்வு' செய்வதற்கான தன்னிச்சையான அதிகாரங்களை வழங்குவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'உத்தேச புனர்வாழ்வு பணியக சட்டமானது, குற்றஞ்சாட்டப்படாத ஒருவரை தடுப்புக்காவலில் வைப்பதன் புதிய வடிவம் என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

அத்துடன், 'புனர்வாழ்வு சட்டமூலம், சித்திரவதை, தவறான சிகிச்சை மற்றும் முடிவில்லாத காவலில் வைக்கப்படுவதற்கான கதவைத் திறக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு சட்டமூலம் என்பது, இலங்கையில் தன்னிச்சையான தடுப்புக்காவல் மற்றும் சித்திரவதைகளை அங்கீகரிக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு நெருக்கமானது என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)



## முறையாக பயன்படுத்தப்படாத 160 அதி நவீன ரயில் பெட்டிகள்!

*கொழும்பு, ஒக். 18*

இந்திய கடன் உதவியின் கீழ் 1156 கோடி ரூபாய் (8.26 கோடி அமெரிக்க டொலர்) செலவில் வாங்கப்பட்ட லொக்கோமோட்டிவ் இயந்திரத்துக்கான 160 ரயில் பெட்டிகள் பயணிகள் போக்குவரத்துக்கு முறையாகப் பயன்படுத்தப்படவில்லை என கணக்காய்வுத் திணைக்களத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

இந்த அறிக்கையின்படி, இலங்கை ஒரு ரயில் பெட்டியை இறக்குமதி செய்ய 0.558 மில்லியன் டொலர்களைச் செலவிட்டுள்ளது. அவை 2021 இல் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் பத்து ரயில்கள் ஆரம்பத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும், மற்றவை அனைத்தும் எந்த ஆய்வும் இன்றி விவரக்குறிப்புகளுக்கு வெளியே கொண்டு செல்லப்பட்டதாகவும், அவற்றின் நீளம் மற்றும் உயரம் மற்றும் இருக்கைகளின் எண்ணிக்கை விவரக்குறிப்புகளில் காட்டப்பட்டுள்ள தரநிலைகளுக்கு ஏற்ப இல்லை என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின்படி, நிர்ணயிக்கப்பட்ட அளவை விட வண்டிகளின் நீளம் மற்றும் அகலம் அதிகரிப்பதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக மேட்டுப்பாதை போன்ற கூர்மையான வளைவுகள் உள்ள வீதிகளில் இந்த பெட்டிகளுடன் ரயில்களை இயக்குவதால் ரயில் தடம்புரண்டு விபத்துகள் ஏற்படுகின்றன.

இறக்குமதி செய்யப்பட்ட ரயில் விவரக்குறிப்பில் குறிப்பிடப்பட்டதை விட குறைவான இருக்கைகள் இருந்ததாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, மூன்றாம் வகுப்பு கபின்களில் 82 இருக்கைகள், இரண்டாம் வகுப்பு கபின்களில் 82 இருக்கைகள், குளிரூட்டப்பட்ட கபின்களில் 70 இருக்கைகள் என 234 இருக்கைகள் குறைக்கப்பட்டுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது.

எனினும் திணைக்களத்துக்கு எந்த நஷ்டமும் ஏற்படவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

## தாமரைக் கோபுரம் திறக்கப்பட்டு 1 மாதத்தில் ரூ.9 கோடி வருமானம்!

*கொழும்பு, ஒக். 18*

கொழும்பில் உள்ள தாமரை போபுரத்தை கடந்த ஒரு மாதத்தில் ஒரு இலட்சத்து 70 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பார்வையிட்டுள்ளனர்.

இதற்கமைய தாமரைக் கோபுரம் பொதுமக்களுக்கு கையளிக்கப்பட்டு ஒரு மாதம் நிறைவடைந்த நிலையில், ஒரு இலட்சத்து 70 ஆயிரத்து 320 பேர் அதனை பார்வையிட்டுள்ளதாக கொழும்பு தாமரைக் கோபுரத்தின் முகாமை செய்யும் தனியார் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்மூலம் கடந்த மாதத்தில் முழுமையாக 9 கோடி ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக அதன் நிறைவேற்று அதிகாரி ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க குறிப்பிட்டார். (அ)

## சி.ஐ.டியில் அஸாத் ஸாலி!

*கொழும்பு, ஒக். 18*

மேல் மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் அஸாத் ஸாலி இன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையானார்.

நிதி மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள திலினி பிரியமாலியுடன் மேற்கொள்ளப் பட்டதாகத் தெரிவிக்கப்படும் கொடுக்கல் - வாங்கல் தொடர்பில் சாட்சிகளை வழங்குவதற்காக அஸாத் ஸாலி குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலையானார்.

காணி ஒன்றை விற்பனை செய்ததன் மூலம் கிடைக்கப் பெற்ற 80 இலட்சம் ரூபாவைக் குறித்த பெண்ணிடம் முதலீடு செய்தார் என்று வெளியான தகவல்கள் தொடர்பிலேயே அஸாத் ஸாலி சாட்சியம் வழங்குவதற்கு முன்னிலையாகினார்.

ஜானகி சிறிவர்தன என்ற பெண்ணின் ஊடாகவே 80 இலட்சம் ரூபா வைப் பெற்றுக்கொடுத்ததாக சிங்கள ஊடகம் ஒன்றிடம் அஸாத் ஸாலி தெரிவித்திருந்தார். (அ)

## இலங்கையிலிருந்து மேலும் ஆறு பேர் தமிழகத்தில் தஞ்சம்

*சென்னை, ஒக். 18*

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக இன்றும் 6 பேர் அகதிகளாகத் தமிழகத்தைச் சென்றடைந்துள்ளனர்.

மன்னாரில் இருந்து படகு வழியாகச் சென்றவர்கள் இந்தியாவின் ஆளுகையில் உள்ள 4 ஆம் திட்டில் தரை இறக்கி விடப்பட்டனர். அவர்களை அவதானித்த தமிழக மீனவர்கள் மறாயன் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

இதையடுத்து அகதிகள் நின்ற இடத்துக்குச் சென்ற இந்தியக் கரையோரக் காவல் படைக்குச் சொந்தமான படகு அவர்களை மீட்டு இராமேஸ்வரத்துக்குச் கொண்டு சென்றது.

இவ்வாறு கொண்டு செல்லப்பட்ட அகதிகள் தற்போது பொலிஸாரின் விசாரணையில் உள்ளனர்.

இலங்கையில் இருந்து தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்றவர்களில் மூன்று ஆண்களும் மூன்று பெண்களும் அடங்குகின்றனர்.

அவர்கள் தலைமன்னார், அரிப்பு மற்றும் பேசாலையைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது. (அ)

## வெள்ளை அரிசி விலை குறைப்பு

*கொழும்பு, ஒக். 18*

இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளை பச்சை அரிசியின் மொத்த விலை 160 ரூபாவாகவும், சில்லறை விலை 178 முதல் 185 ரூபாவாகவும், இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளை பச்சை அரிசி பல்பொருள் அங்காடிகளில் 200 முதல் 210 ரூபா வரையிலும், ஒரு கிலோ வெள்ளை பச்சை அரிசி 200 முதல் 210 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.10.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்

6.30 மணி : வணக்கம் டான்



06.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்

7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்

8.30 மணி : காலை செய்திகள்

9.00 மணி : கலாட்டா காலை-நேரலை

10.30 மணி : தொடர் நாடகம்

11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை




**பகல்**

1.00 மணி : மழலைகள் நேரம் (மறுஒளிபரப்பு )

1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-திரைப்படக்காட்சிகள்

4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி

5.30 மணி : குறுந்திரை நேரம்

6.00 மணி : சினிமா சினிமா

6.30 மணி : மூவி டோக்கீஸ் - வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**

7.00 மணி : கதை நேரம் - நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்

9.00 மணி : சங்கப்பலகை - இலக்கிய நிகழ்ச்சி - நிலையும் நினைப்பும்

10.00 மணி : BLACK AND WHITE

**DAN COMEDY HD**

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி

8.00 மணி : சிரிப்பு சரடிவெடி

10.00 மணி : ஒரு பட கொமடி

11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்

3.00 மணி : குண்டக்க மண்டக்க

5.00 மணி : ஒரு பட கொமடி

6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி

9.00 மணி : சிரிப்போ சிரிப்பு

10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்

7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்

8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்

9.00 மணி : மெல்லிசை

10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி

1.00 மணி : விசை இசை

3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)

4.00 மணி : உ டைம் ராகங்கள் (நேரலை)

5.00 மணி : இனிது இனிது

6.00 மணி : என்றென்றும் இசை

7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்

9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்

6.00 மணி : தரம் 07 - தமிழ்

6.45 மணி : தரம் 08 - தமிழ்

7.30 மணி : தரம் 09 - கணிதம்

8.15 மணி : தரம் 10 - கணிதம்

9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்

10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி

11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்

1.00 மணி : தரம் 07 - தமிழ்

2.00 மணி : தரம் 08 - தமிழ்

3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்

3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்

4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்

5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்

5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்

6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**ஓம் நிலி**

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்

6.00 மணி : சுப்ரபாதம்

6.30 மணி : சுப்ரபாதம்

7.00 மணி : இன்றைய சிந்தனை

7.05 மணி : இன்றைய நாள்

7.20 மணி : ஈழத்து சித்தர்கள்

7.30 மணி : மங்கள இசை

8.00 மணி : அருளுரை

8.30 மணி : திருவாசகம்

9.00 மணி : திருவிழா-01

10.00 மணி : பஜனை

10.30 மணி : தமிழககோவில் திருவிழா

11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி

12.30 மணி : திருவிழா-02

6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்

7.30 மணி : அருளுரை

8.00 மணி : திருவிழா-01

**CHANNEL HOLY MARY**

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை

7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்

8.00 மணி : ஜெபமாலை

9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)

10.00 மணி: அன்னை மரியா

10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)

01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)

02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)

03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)

04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)

05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)

06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

07.00 மணி : ஞானவழி

07.30 மணி : அன்பியம்

**Pirai Television**

**காலை**

6.00 மணி : கிராத்

7.00 மணி : இறை சிந்தனை

7.30 மணி : இஸ்லாமிய பாடல்

8.00 மணி : கலந்துரையாடல்

9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்

10.00 மணி : மனதோடு பேசலாம்

10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்

11.00 மணி : சுவனப்பாதை

11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்

12.30 மணி : இஸ்லாமிய வரலாறு

1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்

2.00 மணி : கஸீதா

2.30 மணி : இறை சிந்தனை

3.00 மணி : பாடல்கள்

3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்

4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டுன்

5.00 மணி : இறை தென்றல்

6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்

8.00 மணி : இஸ்லாமிய வரலாறு